# VETRII IAS STUDY CIRCLE

## TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## ஜனவரி - 2020

ISO 9001 : 2015

**An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011**


**Head Office**

Old No.52, New No.1, 9th Street, F Block, 1st Avenue Main Road,
(Near Istha siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600102.

**Phone: 044-2626 5326 | 98844 72636 | 98844 21666 | 98844 32666**

**Branches**

**SALEM**

No.189/1, Meyanoor Road, Near ARRS Multiplex, (Near Salem New bus Stand), Opp. Venkateshwara Complex, Salem - 636004.

**0427-2330307 | 95001 22022**

**KOVAI**

No.347, D.S.Complex (3rd floor), Nehru Street,Near Gandhipuram Central Bus Stand, Ramnagar, Kovai - 9

**75021 65390**

**Educarreerr Location**

**Vivekanandha Educational Institutions for Women,**

Elayampalayam, Tiruchengode - TK Namakkal District - 637 205.

**04288 - 234670 | 91 94437 34670**

**Patrician College of Arts and Science,**

3, Canal Bank Rd, Gandhi Nagar, Opposite to Kotturpuram Railway Station, Adyar, Chennai - 600020.

**044 - 24401362 | 044 - 24426913**

**Sree Saraswathi Thyagaraja College**

Palani Road, Thippampatti, Pollachi - 642 107

**73737 66550 | 94432 66008 | 90951 66009**

# இயக்குநர் வாழ்த்து மடல்



எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

பொருள் :

ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்தபடியே செயல்புரிவதில்
உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிபணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுபடுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்பட்டு அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

**மு. சண்முகம்**
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ். பயிற்சி நிறுவனம்

---

*Published by*

**VETRII IAS STUDY CIRCLE**
F Block New No. 1, 9th Street, 1st Avenue main Road, Chinthamani, Anna Nagar (E), Chennai – 102.
Phone: 044 – 26265326 / 9600124042 / 9840097666
www.vetriias.com
E-Mail: vetriiias@gmail.com / vetriiias2011@gmail.com / vetriiias2018@gmail.com
Feedback: vetriiiasmaterials@gmail.com

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்


1 - 15 **வரலாறு**

▪முக்கிய தினங்கள் ▪உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ▪பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் ▪சிறந்த நபர்கள் ▪விளையாட்டு ▪புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள் ▪விருதுகள் மற்றும் கௌரவங்கள் ▪கலாச்சாரம் ▪சமீபத்திய வரலாற்று நகழ்வு ▪இந்தியா மற்றும் அண்டை நாடுகள் ▪நியமனங்கள்




16- 16 **அரசியல் அறிவியல்**

▪இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ▪சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள் ▪பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள் ▪அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள் ▪மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்




17- 18 **புவியியல்**

▪சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை




19 - 19 **பொருளாதாரம்**

▪புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை



20 - 20 **அறிவியல்**


- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

24 - 30 **தினசரி தேசிய நிகழ்வு**

31 **சர்வதேச நிகழ்வு**


32 **தமிழ்நாடு**









# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| **ஜனவரி 14** | ஆயுதப்படை வீரர்கள் தினம் | ▪ ஆயுதப்படை வீரர்கள் தினம் 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது. தேசிய போர் நினைவாக கொண்டாடப்படுகிறது. 2020ல் நான்காம் ஆண்டு கொண்டாடப்படுகிறது. |
| **ஜனவரி 15** | இந்திய இராணுவ தினம் | |
| **ஜனவரி 15** | 145வது இந்திய வானிலைத் துறை தினம் | |
| **ஜனவரி 19** | தேசிய நோய்த்தடுப்பு தினம் | |
| **ஜனவரி 20-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி** | 31வது சாலை பாதுகாப்பு வார விழா | ▪ இந்த ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரை 31வது சாலைப் பாதுகாப்பு வார விழா கடைபிடிக்கப்படுகிறது. |
| **ஜனவரி 24** | தேசிய பெண் குழந்தைகள் தினம் | ▪ மத்தியபிரதேச மாநிலம் ஜனவரி 24-ம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினத்தை கொண்டாட உள்ளது. இதன் மையக்கருத்து *'Aware girl child – able Madhya Pradesh'* பேட்டி பட்சோ– பேட்டி பாதோ திட்டத்தின் கீழ் கொண்டாடப்பட உள்ளது.<br>▪ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை தேசிய மகளிர் பெண் குழந்தைகள் வாரம் ஜனவரி 24-30, 2020 வரை கடைபிடிக்க உள்ளது. |
| **ஜனவரி 24** | சர்வதேச கல்வி தினம் | ▪ மையக்கருத்து 2020 – *'Learning for People, Palnt, Prosperity and Peace'* |

| | | |
|---|---|---|
| **ஜனவரி 25** | "இந்து தமிழ்" நாளேட்டுக்கு தேசிய விருது | ▪ கடந்த 1950-ம் ஆண்டு ஜனவரி 25-ல் இந்திய தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த நாளை நினைவுகூரும் வகையில், கடந்த 2011 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25-ம் தேதி தேசிய வாக்காளர் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் தேசிய விருதை 'இந்து தமிழ்' நாளேட்டுக்கு குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்க உள்ளார். கடந்த 2011-ம் ஆண்டு முதல் சிறந்த பத்திரிகைகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் தேசிய விருதை வழங்கி கவுரவித்து வருகிறது |
| **ஜனவரி 26-31** | பாரத் பரவ் 2020 | ▪ பாரத் பரவ் 2020 நிகழ்வு ஜனவரி 26 முதல் 31 வரை இந்தியாவில் கொண்டாடப்பட்டது. சிறப்பு செயலாளர் மற்றும் சுற்றுலாத்துறையின் அமைச்சகத்தின் ஆலோசகர் ஸ்ரீ ராஜேஷ் குமார் சதுர்வேதி இந்த நிகழ்வை டெல்லியில் தொடங்கி வைத்தார்.<br>▪ இதன் மையக்கருத்து : "Ek Bharat Shreshtha Bharat" & "Celebrating 150 years of Mahatma Gandhi."<br>▪ இதன் முக்கிய நோக்கம் நாட்டில் பல்வேறு சுற்றுலா இடங்களை பார்வையிட மக்களை ஊக்குவிப்பது (Dekho Apna Desh) ஆகும். |
| **ஜனவரி 26** | சர்வதேச சுங்க தினம் | ▪ மையக்கருத்து : "Customs fostering Sustainability for People, Prosperity and the Planet". |
| **ஜனவரி 27** | சர்வதேச படுகொலை நினைவு தினம் | ▪ மையக்கருத்து : "75 years after Auschwitz-Holocaust Education & Rememberance for Global Justice". |
| **ஜனவரி 28** | லாலா லஜபதி ராய் பிறந்த தினம் | ▪ விடுதலை போராட்ட வீரர் லாலா லஜபதி ராயின் 155வது பிறந்த தினம் ஜனவரி 28ல் கொண்டாடப்பட்டது. பஞ்சாபின் மோகா பகுதியில் கடந்த 1865-ஆம் ஆண்டு பிறந்த லாலா லஜபதி ராய், விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தலைவர்களுள் மிக முக்கியமானவர். லாலா லஜபதி ராய், மக்களால் "பஞ்சாப் சிங்கம்" என்று அழைக்கப்பட்டார். |
| **ஜனவரி 30** | உலக தொழுநோய் தினம் | ▪ மையக்கருத்து - "Leprosy isn't what you think." |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

**இந்திய-ஜப்பான் கடலோரக் காவல் படையினரின் கூட்டுப்பயிற்சி**

- இந்திய - ஜப்பான் நாடுகளின் கடலோரக் காவல்படையினரின் கூட்டுப் பயிற்சி நடைபெற்றது. இந்திய, ஜப்பான் நாடுகளின் கடலோரக் காவல்படையினர் கடந்த 2000-ஆவது ஆண்டு முதல் ஆண்டுதோறும் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.
- இருப்பினும் கூடுதல் நிகழ்வாக கடந்த 2006-ஆம் ஆண்டு இருநாடுகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- இருநாடுகளிடையே நல்லெண்ண உறவுகளைப் பரிமாற்றம் செய்து கொள்ளும் வகையில், துறைசார் திறன்களைப் பரிமாறிக் கொள்ளவும், சேவைகளின்போது மேற்கொள்ள வேண்டிய புதிய உத்திகள் பற்றி அறிந்து கொள்வது உள்ளிட்டவை இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- இந்தியாவிலும் ஜப்பானிலும் இதுவரை 18 முறை கூட்டுப் பயிற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 19-ஆவது முறையாக இந்த ஆண்டு இருநாட்டின் கடலோரக் காவல் படையினரின் கூட்டுப் பயிற்சி சென்னையில் நடைபெறுகிறது.
- இக்கூட்டுப் பயிற்சிக்கு ‘சாஹியோக்-கைஜின்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த பயிற்சியில் பங்கேற்க ஜப்பான் கடலோரக் காவல் படையின் ‘எச்சிகோ’ ரோந்துக் கப்பல் கடந்த 13-ஆம் தேதி சென்னை வந்தடைந்தது.

**குடியரசு தின அணிவகுப்பில் சினூக் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள்**

- இந்திய விமானப் படையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள ‘சினூக்’ மற்றும் ‘அப்பாச்சி’ ரக ஹெலிகாப்டர்கள் வரும் 26-ஆம் தேதி தில்லியில் நடைபெறும் குடியரசு தின விழாவின்போது வான் சாகச நிகழ்ச்சியில் முதல் முறையாக பங்கேற்க உள்ளன.

**2025-க்குள் எஸ்400 ஏவுகணைகள் இந்தியாவிடம் ஒப்படைப்பு**

- இந்தியாவுக்கான எஸ்-400 ஏவுகணைகளை ரஷ்யா தயாரித்து வருகிறது. இந்தியாவுக்கான அனைத்து எஸ்.400 ஏவுகணைகளும் 2025ம் ஆண்டுக்குள் வழங்கப்படும்.
- கடந்த 2007 முதல் ரஷ்ய ராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள எஸ்-400 ஏவுகணை மிகவும் சக்தி வாய்ந்தது. இந்த வகை ஏவுகணை ரஷ்யாவிடம் மட்டுமே உள்ளது. இந்நிலையில் இந்தியாவின் வான் பாதுகாப்புக்காக 550 கோடி டாலரில் 5 யூனிட் எஸ்-400 ஏவுகணைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் இந்தியா-ரஷ்யா இடையே கடந்த 2018 அக்டோபரில் ஏற்பட்டது. இந்த கொள்முதலுக்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்தது. இந்தியாவுக்கு எதிராக பொருளாதாரத்தடை விதிக்கப்படும் என்றும் எச்சரித்தது.
- ஆனால் இந்த ஒப்பந்தம் தேசப் பாதுகாப்பு தொடர்பானது என்பதால் பின்வாங்க மாட்டோம் என இந்தியா கூறிவிட்டது.

**இஸ்ரோவின் ஜிசாட்-30 விண்ணில் நிலைநிறுத்தம்**

- தென் அமெரிக்காவின் பிரெஞ்ச் கயானா கொரு ஏவுளத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்ட இஸ்ரோவின் (இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின்) ஜிசாட்-30 தகவல் தொழில்நுட்ப செயற்கைக்கோள், திட்டமிட்ட தற்காலிக சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.
- 2020-ஆம் ஆண்டில் இஸ்ரோவின் முதல் செயற்கைக்கோளான ஜிசாட்-30. பிரான்ஸ் விண்வெளி நிறுவனத்தின் ஏரியன் 5 விஏ-251 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது. அதனுடன் பிரான்ஸை சேர்ந்த இடெல்சாட் நிறுவனத்தின் இடெல்சாட் கனெக்ட் செயற்கைக்கோளும் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

- ராக்கெட் ஏவப்பட்ட 38 நிமிடங்கள் 25 விநாடிகளில் 3,357 கிலோ எடை கொண்ட ஜிசாட்-30 செயற்கைக்கோள் வெற்றிகரமாக பிரிக்கப்பட்டு, திட்டமிட்ட தற்காலிக புவி சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப் பட்டது.
- **பயன்கள் :** இந்த அதிநவீன தகவல்தொடர்பு செயற்கைக்கொள் அதிலுள்ள கே.யு.பேன்ட் அலை வரிசை மூலமாக இந்தியா மற்றும் அதன் தீவுகளுக்கு மட்டுமின்றி வளைகுடா நாடுகள் உள்ளிட்ட ஏராளமான ஆசிய நாடுகளுக்கும் தகவல் தொடர்வு சேவையை வழங்க உள்ளது.
- ஜிசாட்-30 தகவல்தொழில்நுட்ப செயற்கைக் கோளில் ஆயுள்காலம் 15 ஆண்டுகளுக்கும் மேலாகும்.

### "Winged Raider"

- இந்திய இராணுவம் சமீபத்தில் விங்கட் ரைடர் எனப்படும் மிகப்பெரிய வான்வழிப் பயிற்சியை நடத்தியது.
- இந்த பயிற்சியில் சுமார் 500 விமானங்கள் பங்கேற்றன. வடகிழக்குப் பகுதியில் இந்த பயிற்சி நடத்தப்பட்டது.

### தஞ்சை விமானப்படை நிலையத்தில் சுகோய் விமானப்படை அணி தொடக்கம்

- தஞ்சாவூர் விமானப் படை நிலையத்தில் சுகோய் 30 எம்.கே.ஐ. போர் விமானப்படை அணி (ஜனவரி 20)ல் தொடங்கப்பட்டது. இதை முப்படைத் தளபதி விபின் ராவத் தொடங்கிவைத்தார்.
- சுகோய் 30 எம்.கே.ஐ. ரக போர் விமானப் படையணி தொடங்கப்பட்டிருப்பதன் மூலம் இப்படை நிலையம் தெற்கு தீபகற்பத்தில் முக்கியத்துவம் வாய்ந்த வான்படைத் தளமாக மாற்றப்பட்டுள்ளது.

#### பழைமையான விமானப் படைத்தளம்

- தஞ்சாவூரில் தற்போது இந்திய விமானப் படை நிலையம் உள்ள இடத்தில் 1940 ஆம் ஆண்டில் விமானப் படைத்தளம் இருந்தது.
- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்தப் படைத்தளம் கைவிடப்பட்டது.
- கடந்த 2013, மே 27ஆம் தேதி விமானப் படை நிலையமாக நாட்டுக்கு அர்ப்பணிக்கப் பட்டது.

### ஸ்டார்ட் ஆப் இந்தியா

- வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கைத்தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை ஊக்குவிக்கும் அமைப்பான (DPIIT) புதுடெல்லியில் நடைபெற உள்ள குடியரசு தின அணிவகுப்பில் ஸ்டார்ட் ஆப் இந்தியா குறித்து முதல்முறையாக காட்சிப்படுத்த உள்ளது.
- 'Reach for the Sky' என்ற மையக்கருத்தின் கீழ் குடியரசு தின அணிவகுப்பில் ஸ்டார்ட் ஆப் இந்தியா பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.

### சாரங் ரக பீரங்கி சோதனை

- இந்திய ஆயுத தளவாடமையம், மத்தியப்பிரதேச மாநிலம், ஜபல்பூர் மாவட்டத்தில் உள்ள காமாரியா பகுதியில் "சாரங்" ரகபீரங்கியை முதல்முறையாக பரிசோதனை செய்தது. இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

### குடியரசு தின விழா அணிவகுப்பு: முதல் முறையாக இடம்பெற்ற தனுஷ் பீரங்கி

- நாட்டின் 71-ஆவது குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. குடியரசு தின விழா அணிவகுப்பில் முதல்முறையாக உள்நாட்டு தயாரிப்பான தனுஷ் பீரங்கி இடம்பெற்றது.
- 155 மில்லிமீட்டர்/45 காலிபர் கொண்ட இந்த பீரங்கி, குட்டையான இழுவை பீரங்கி வகையாகும்.

### நாட்டின் முதல் ஆர்எஸ்எஸ் ராணுவ பள்ளி

- நாட்டிலேயே முதன்முறையாக உத்தரப் பிரதேசத்தில் ஆர்எஸ்எஸ் ராணுவப் பள்ளி வரும் ஏப்ரல் மாதம் தொடங்கவுள்ளது.
- ராணுவத்தில் இணைய விரும்பும்

இளைஞர்களுக்கு சரியான கல்வி முறை, கலாச்சாரம், சமூக நல்லிணக்கத்தை போதிக்கும் பள்ளியாக இது இருக்கும்.

- இந்த பள்ளிக்கு, முன்னாள் ஆர்எஸ்எஸ் தலைவர் ராஜு பையாவின் பெயரில் ராஜு பையா சைனி வித்யா மந்திர் (ஆர்எஸ்எஸ்விஎம்) என்று பெயரிடப்படும்.

### ஆப்ரேஷன் வண்ணிலா

- இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மடகாஸ்கர் தீவிற்கு இந்திய கப்பற்படை ஆபரேஷன் வண்ணிலா அறிமுகம் செய்துள்ளது.
- முதல் கட்டமாக ஐ.என்.எஸ் ஐராவத் கப்பல் உதவி அளிப்பதற்காக அனுப்பப்படுகிறது. சமீபத்தில் ஏற்பட்ட புயலினால் 92,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### அதிவேக இடைமறிப்பு படகு *C-448*

- இந்திய கப்பற்படை கர்நாடக மாநிலம் மங்களூரில் அதிவேக இடைமறிப்பு படகு C-448ஐ (high speed interceptor boat) தொடங்கி வைத்துள்ளது. கடலோர காவல்படை பிராந்திய இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஏ.பி. படோலாவின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இந்த படகு இயக்கப்படும்.
- இந்த படகு கப்பல்கட்டும் நிறுவனமான L&T நிறுவனதால் உருவாக்கப்பட்டு உதவி கமாண்டர்அபூர்வ சர்மாதலைமையில் 12 பேர் கொண்ட குழுவினர் செயல்படுத்த உள்ளனர். ரோந்து மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு படகு பயன்படுத்தப்படும்.

### அசாம் ரைபிள்ஸ் போர் நினைவு சின்னம்

- அசாம் ரைபிள்ஸ் (இராணுவ பிரிவு) நாகாலாந்தில் "Veer Samriti" என்ற போர் நினைவிடத்தை கட்டி உள்ளது. வடக்கு-கிழக்கு மாநிலங்களுக்கு எதிராக நடைபெற்ற நிகழ்வில் இறந்தவர்கள் நினைவாக இந்த போர் நினைவிடம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த போர் நினைவிடம் நாகாலாந்தின் மோகோக்சுங் என்ற இடத்தில் அமைத்து உள்ளது. இது கலாச்சார மற்றும் அறிவுசார் மையமாக திகழும்.

**அசாம் ரைபிள்**

- நிறுவம் – 1835
- தலைமையிடம் – சிலாங், மேகாலயா

### *SAMPRITI-IX* பயிற்சி

- இந்தியா மற்றும் வங்க தேச நாடுகளுக்கு இடையோயன SAMPRITI-IX என்ற இராணுவ பயிற்சி. மேகாலயாவில் உள்ள உம்ரோய் (Umroi) பகுதியில் பிப்ரவரி 3 முதல் 16 வரை நடைபெற உள்ளது.
- இப்பயிற்சியில் பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுவதற்காக இரு நாட்டு இராணுவ வீரர்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது.

## 1.3 உலக அமைப்புகள் - உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### உலகளாவிய இடர்கள் அறிக்கை

- உலகப் பொருளாதார அமைப்பு (WEF), உலகளாவிய இடர்கள் அறிக்கையில் பருவநிலை மாற்றம், புவிசார் அரசியல் கொந்தளிப்பு, அதிகரித்துவரும் பொருளாதாரத் தேக்கம், பாரபட்சமான டிஜிட்டல் தொழில்நுட்ப வளர்ச்சி, மருத்துவ அமைப்புகளின் மீதான அழுத்தம் ஆகிய இடர்களை வரும் ஆண்டுகளில் உலக நாடுகள் சந்திக்கும் என்று அறிவித்துள்ளது.

### உலகளாவிய போட்டித்தன்மை குறியீடு 2020

*(Global competitiveness Index)*

- உலகாளவிய போட்டித் தன்மை குறியீடு 2020 வெளியிடப்பட்டுள்ளது. இந்தியா எட்டு இடங்கள் முன்னேறி 72வது இடத்தில் உள்ளது. 132 நாடுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் சுவிட்சர்லாந்த் முதல் இடத்தில் உள்ளது.

| தரவரிசை | நாடுகள் |
|---|---|
| 2 | அமெரிக்கா |
| 4 | ஸ்வீடன் |
| 5 | டென்மார்க் |
| 6 | நெதர்லாந்த் |
| 7 | பின்லாந்த் |
| 8 | லக்ஷம்பர்க் |
| 9 | நார்வே |
| 10 | ஆஸ்திரேலியா |

**சாகர் மாதா சம்பாத் மாநாடு**

- நேபாளத்தின் சார்பில் 'சாகர்மாதா சம்பாத்' (எவரெஸ்ட் பேச்சுவார்த்தை) மாநாடு வரும் ஏப்ரல் 2 முதல் 4-ம் தேதி வரை காத்மாண்டில் நடைபெற உள்ளது.

## 1.4 சிறந்த நபர்கள்

**கேப்டன் தனியா ஷேர்கில் தலைமையில் அணிவகுப்பு**

- குடியரசு தின விழாவின் அணிவகுப்புக்கு தலைமை தாங்க உள்ள முதல் பெண் ராணுவ அதிகாரி தனியா ஷெர்கில் ஆவார். இவர் அனைத்து ஆண்கள் அணிவகுப்பை வழி நடத்தினார்.



**ஒன்றிய உலக மல்யுத்த தரவரிசை**

- இந்திய மல்யுத்த குழு, ஒன்றிய உலக மல்யுத்த தரவரிசை போட்டியின் (முதல் பதிப்பில்) 7 பதக்கம் பெற்று (4 தங்கம், 2 வெள்ளி மற்றும் 1 வெண்கலம்) உள்ளது. ஒன்றிய உலக மல்யுத்த போட்டி இத்தாலி நாட்டின் ரோம் நகரில் நடைபெற்றது.

| வென்றவர் | பிரிவு | பதக்கம் |
|---|---|---|
| பஜிரங் புனியா | 65 கி.கி. | தங்கம் |
| ரவிகுமார் தாகியா | 61 கி.கி. | தங்கம் |
| வினேஷ் போகட் | 53 கி.கி. | தங்கம் |
| குருபீத் சிங் | 82 கி.கி. | தங்கம் |
| அனுஷ் மாலிக் | 57 கி.கி. | வெள்ளி |
| சுனில் குமார் | 97 கி.கி. | வெள்ளி |
| சஞ்ஜன் பன்வால் | 77 கி.கி | வெண்கலம் |

**ஒன்றிய உலக மல்யுத்தம்**

- தொடக்கம் – 1912
- தலைமையிடம் – சுவிட்சர்லாந்த்

**குடியரசுதின சிறப்பு விருந்தினராக பிரேசில் அதிபர்**

- 26-ந்தேதி டெல்லியில் நடக்கும் குடியரசு தினவிழாவில் பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ கலந்து கொண்டார்.

**சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த தினம்**

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 123வது பிறந்த தினத்தையொட்டி, நாட்டின் சுதந்திர போராட்டத்தில் அவரது பங்களிப்பை பிரதமர் நரேந்திர மோடி நினைவு கூர்ந்தார்.
- கடந்த 1897-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் தேதி ஒடிஸா மாநிலம், கட்டாக்கில் பிறந்த சுபாஷ் சந்திரபோஸ் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்றார். அவர், அனைவராலும் "நேதாஜி" என்று அழைக்கப்படுகிறார்.

## 1.5 முக்கிய இடங்கள்

**8 அதிசயங்கள் எஸ்.சி.ஓ. பட்டியல்**

- குஜராத்தில் உள்ள 182m உயரம் கொண்ட "ஒற்றுமை சிலை" ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் 8 அதிசயங்கள் எஸ்.சி.ஓ பட்டியலில்" இணைக்கப்பட்டு உள்ளது.
- இச்சிலை உலகின் மிகப்பெரிய சிலை, இச்சிலை இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர் துணை பிரதமராக இருந்தவர் சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் 143வது பிறந்தநாளை முன்னிட்டு நரேந்திர மோடி திறந்து துவங்கி வைத்தார்.

## 1.6 விளையாட்டு

**2019 சிறந்த ஒருநாள் வீரர் ரோஹித்**

- 2019 ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் வீரர் விருதுக்கு ரோஹித் சர்மா தேர்வு செய்யப் பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சார்பில் ஆண்டுதோறும் சிறந்த வீரர் விருதுகள் வழங்கப்படுகின்றன. இதன்படி ஒருநாள் ஆட்டத்தில் சிறந்த வீரர் விருது இந்திய துணை கேப்டன் ரோஹித் சர்மாவுக்கு வழங்கப்பட்டது.

**விராட் கோலிக்கு சிறப்பு**

- கடந்த 2018-இல் ஐசிசி சிறந்த வீரர் விருதை வென்ற கோலி, தற்போது ஸ்பிரிட் ஆஃப் கிரிக்கெட் என்ற சிறப்பு விருதை வென்றார்.

**சர்வதேச ஆண்கள் கிரிக்கெட்டில் முதல் பெண் மூன்றாம் நடுவர்**

- மேற்கிந்திய தீவுகளை சேர்ந்த ஜாக்குலின் வில்லியம்ஸ் சர்வதேச ஆண்கள் கிரிக்கெட் போட்டியின் முதல் பெண் மூன்றாம் நடுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் ஆண்கள் கிரிக்கெட் போட்டிக்கு நடுவராக இருந்துள்ளார்.

**முதல் சர்வதேச சதுரங்க போட்டி ஹவுஸ் போட் 2020**

- சர்வதேச சதுரங்க போட்டி 2020 இந்தியாவின் கேரளாவில் உள்ள சுற்றுலா ஹவுஸ் போட்டில் நடைபெற உள்ளது. சர்வதேச சதுரங்க போட்டி முதல்முறையாக கேரளா ஹவுஸ் போட்டில் (House Boat) நடைபெறுகிறது.
- இந்த போட்டி 6 நாள்கள் நடைபெற உள்ளது. 'Spice Route luxury houseboat' என்ற பெயரிலான படகில் நடைபெறுகிறது. இந்த நிகழ்விற்காக கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து ஜெர்மனி, ஆஸ்திரியா, போலாந்த் மற்றும் ஸ்லோவோகியா ஆகிய நாடுகள் இணைந்து சதுரங்க போட்டிக்கான பயிற்சி வழங்கியுள்ளது.
- இதற்காக 40 போட்டியாளர்கள், 10 நாடுகளில் இருந்து பங்கேற்க வருகை தந்துள்ளனர்.
- 

**வில்வித்தை சங்க தடைநீக்கம்**

- தற்போது தேர்தல் நடைபெற்று (அர்ஜுன் முண்டா) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.
- நவம்பர் மாதம் தாய்லாந்து தலைநகர் பாங்காங்கில் நடந்த 21வது ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர், வீராங்கனைகள் ஒலிம்பிக் கொடியுடன் நடுநிலை வீரர்களாக பங்கேற்றனர்.
- அந்த போட்டியில் வென்றதின் மூலம் தீபிகா குமாரி உட்பட பலர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாக தகுதிப் பெற்றனர்.

**உலக வில்வித்தை**

- தொடக்கம் – 4 செப்டம்பர் 1931
- தலைமையகம் – சுவிட்சர்லாந்து

# 1.7 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### ஹியுமன் டிகினிட்டி

- தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் மத்திய அமைச்சர் அஸ்வினி குமார் எழுதிய ஹியுமன் டிகினிட்டி நூலை முன்னாள் குடியரசு துணைத் தலைவர் ஹமீது அன்சாரி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், ஆகியோர் வெளியிட்டனர்.

### காந்தி'ஸ் ஹிந்துயிஸம்: தி ஸ்ட்ரகிள் அகெயின்ஸ்ட் ஜின்னா'ஸ் இஸ்லாம்

- இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்த நாளில் மகாத்மா காந்தி பாகிஸ்தானில் இருக்க விரும்பினார் என்று முன்னாள் மத்திய அமைச்சர் எம்.ஜே.அக்பர் எழுதிய புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ''காந்தி'ஸ் ஹிந்துயிஸம்: தி ஸ்ட்ரகிள் அகெயின்ஸ்ட் ஜின்னா'ஸ் இஸ்லாம்'' என்ற தலைப்பில் எம்.ஜே.அக்பர் புத்தகத்தை எழுதியுள்ளார்.

### *'Essays and Reminiscences: A Festschrift in Honour of Nani A Palkhivala'*

- *'Essays and Reminiscences: A Festschrift in Honour of Nani A Palkhivala'* என்ற இந்த புத்தகத்தை இந்திய நீதித்துறை மற்றும் பொருளாதார நிபுணர் நானாபோய் பால்கிவாலாவின் பிறந்த நாளை நினைவு கூறும் விதமாக இந்த புத்தகம் வெளியிடப்பட்டது.

### *'The winning Sixer'*

- *'The Winning Sixer: Leadership lessons to master"* என்ற புத்தகத்தை அனில் ராதா கிருஷ்ணா கும்ளே பெங்களூரில் வெளியிட்டார். இப்புத்தகம் இந்திய முன்னாள் கிரிக்கெட் குழுவின் தொடக்க ஆட்டக்காரர் வூர்கேரி வெங்கட் ராமன் எழுதி உள்ளார்.
- இவர் தற்போது தேசிய மகளிர் கிரிக்கெட் குழுவின் பயிற்சியாளராக உள்ளார்.

### *The Gateway*

- *The Gateway :A Social Commentary on Safety of Senior Citizens'* என்ற புத்தகத்தை ஹரிஹரன் பாலகோபாலன் எழுதி உள்ளார். இப்புத்தகத்தை நீதிபதி கொனகுப்ப கட்டில் கோபினாதன் பாலகிருஷ்ணன், டெல்லியில் நடைபெற்ற 14^வது^ தலைமை பாதுகாப்பு மாநாட்டில் வெளியிட்டார். இப்புத்தகம் மூத்தகுடி மக்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பின்மை குறித்து வலியுறுத்துகிறது.

### *40 Years of Sportstar; 40 Superstars*

- உலக பேட்மிண்டன் சாம்பியன் பி.வி.சிந்து' *40 years of sportstar; 40 superstars'* என்ற புத்தகத்தை வெளியிட்டார். இந்த புத்தகம் விளையாட்டுத் துறையில் 40 ஆண்டுகள் நிறைவடைந்த விளையாட்டு நட்சத்திரங்களின் வெற்றிகளை கூறும் ஒருங்கிணைந்த புத்தகமாகும். அதில் கபில்தேவ், இம்ரான்கான், ராகுல்ட்ராவிட், மேரிகோம் மற்றும் இதர நபர்கள் பற்றி இந்த புத்தகத்தில் விவரிக்கப்பட்டு உள்ளது. 24 வயதான பி.வி. சிந்து இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியாமிர்சா பற்றி எழுதியுள்ளார்.

### *"The Sotry of Yoga"*

- *'First Definitive History' of Yoga, "The Story of Yoga: from India to Comtemporary world'* என்ற புத்தகத்தை ஆலிஸ்டர் ஷேரர் (Alistair Shearer) என்பவர் எழுதி உள்ளார். இந்தியாவில் பண்டைய காலத்திலிருந்து இப்போது வரையிலான யோகா பயிற்சியை பற்றி இப்புத்தகம் விவரிக்கிறது.

### வேர் கைண்ட்னஸ் ஸ்போக்

- புதுச்சேரி துணைநிலை ஆளுநராக கிரண் பேடி பதவியேற்றது முதல் தற்போது வரை அவரின் செயல்பாடுகள் குறித்த 'வேர் கைண்ட்னஸ் ஸ்போக்' (இரக்க குணம் பேசுமிடம்) எனும் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் இந்த நிகழ்வில் இந்த புத்தகத்தை வெளியிட்டார்.

**"Balwa" ஹிந்தி நாவல்**

- *மத்திய சிறுபான்மையினர் அமைச்சர் முக்தார் அபாஸ் நாவி Balwa என்ற புதிய நாவலை வெளியிட்டார். இப்புத்தகம் கடந்த 1990குள் நடைபெற்ற நிகழ்வை விவரிக்கிறது.*
- *மத, அரசியல், நிர்வாகத்தினால் சமூகம் தவறாக வழி நடத்தப்படுவதை இது விவரிக்கிறது. மேலும் நாவிக் எழுதி உள்ள ஹிந்தி நாவலான 'Raj Lila' என்ற புத்தகம் பழங்குடியின பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களை விவரித்துள்ளார். இப்புத்தகம் விரைவில் வெளியிடப்பட உள்ளது.*

# 1.8 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

**பத்ம விருதுகள் அறிவிப்பு**



- *மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர்கள் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ், அருண் ஜேட்லி, சுஷ்மா ஸ்வராஜ் உள்ளிட்ட 7 பேருக்கு பத்மவிபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.*
- *தமிழகத்தைச் சேர்ந்த சமூக சேவகர் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், டிவிஎஸ் குழுமத் தலைவர் வேணு சீனிவாசன் ஆகியோர் பத்மபூஷண் விருது பெறவுள்ளனர்.*
- *2020-ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்தது.*

**பத்மவிபூஷண்: *(7 பேர்)***

- *மோரீஷஸ் முன்னாள் பிரதமர் அனிருத் ஜெகந்நாத்,*
- *பாடகர் சன்னுலால் மிஸ்ரா*

**பத்மபூஷண்: *(16 பேர்)***

- *மத போதகர் மும்தாஸ் அலி,*
- *மறைந்த வங்கதேச தூதர் சையது முவாஸெம் அலி,*
- *பாடகர் அஜய் சக்ரவர்த்தி,*
- *சமூக சேவகர் அனில் பிரகாஷ் ஜோஷி*

**பத்மஸ்ரீ: *(118 பேர்)***

- *பாலிவுட் இயக்குநர் கரண் ஜோஹர்,*
- *மருத்துவர் பத்மாவதி பந்தோபாத்யாய,*
- *பாடகர் அட்னான் சமி,*
- *தொழிலதிபர் பரத் கோயங்கா*
- *கர்நாடக இசைக் கலைஞர்களான லலிதா சிதம்பரம்*
- *சரோஜா சிதம்பரம்,*
- *ஓவியர் மனோகர் தேவதாஸ்,*
- *சமூக சேவகர் எஸ்.ராமகிருஷ்ணன்,*
- *நாகஸ்வர இசைக் கலைஞர்கள் காலீஷாபி மெஹபூப்*
- *ஷேக் மெஹபூப் சுபானி,*
- *சென்னை ஐஐடியின் விரிவுரையாளர் பிரதீப் தலப்பில்*
- *கிருஷ்ணம்மாள்*
- *திண்டுக்கல் மாவட்டம் அய்யங்கோட்டையைச் சேர்ந்தவர் கிருஷ்ணம்மாள்.*
- *மகாத்மா காந்தியடிகளின் சர்வோதய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அகிம்சை வழியில் நிலங்களை மீட்பதற்கான பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தார். லாப்டி என்ற இயக்கத்தைத் தொடங்கினார். ஏற்கெனவே பத்மஸ்ரீ விருது பெற்றுள்ள அவருக்கு பத்மபூஷண் இப்போது அளிக்கப்பட்டுள்ளது.*
- ***பம்பே சகோதரிகள்***
- *தமிழகத்தைச் சேர்ந்த கர்நாடக இசைப் பாடகிகளான பாம்பே சாகோதரிகள் என அழைக்கப்படும் லலிதா, சரோஜாவுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்படுகிறது. இவர்கள் மராட்டிய மாநிலம் பம்பாயில் பிறந்தவர்கள்.*
- *தமிழ் மொழியில் மட்டுமல்லாது தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம்,*

இந்தி, மராத்தி ஆகிய மொழிகளிலும் பாடி வருகின்றனர்.

- **சென்னை ஐஐடி பேராசிரியர் பிரதீப்**
- சென்னை ஐஐடியில் பணியாற்றும் வேதியியல் பேராசிரியர் பிரதீப்புக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- கேரள மாநிலம் மலப்புரத்தைச் சேர்ந்தவர்.

### தொடர் நடவடிக்கைகளால் தமிழகத்தில் சாலை விபத்துகள் குறைவு

- நாட்டிலேயே சாலைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து சிறப்பாகச் செயல்படுத்தி ஒரு முன் மாதிரி மாநிலமாக தமிழகம் இருப்பதாகப் பாராட்டி தமிழகத்துக்கு தேசிய விருது வழங்கப்பட்டது.
- தில்லியில் நடைபெற்ற 31வது தேசிய சாலைப் பாதுகாப்பு வார விழாவில் இந்த விருதை மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய சாலைப் போக்கு வரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோர் தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் எம். ஆர். விஜய பாஸ்கரிடம் வழங்கினர்.
- தேசிய அளவில் விபத்துகளையும் உயிரிழப்புகளையும் குறைத்த முதல் மாநிலமாக தமிழகம் இருப்பதற்காக மத்திய அரசு இந்த விருதை வழங்கியுள்ளது.

### சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு விருதுகள் அறிவிப்பு

- சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு விருது பெற்றவர்களின் பெயர்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

| விருது | விருதாளர் |
|---|---|
| தமிழ்த்தாய் விருது | சிகாகோ தமிழ்ச் சங்கம் |
| கபிலர் விருது | புலவர் வெற்றியழகன் |
| உ.வே.சா. விருது | முனைவர் சரசுவதி இராமநாதன் |
| சொல்லின் செல்வர் விருது | சிந்தனைக் கவிஞர் முனைவர் கவிதாசன் |
| ஜி.யு.போப் விருது | மரிய ஜோசப் சேவியர் |
| உமறுப்புலவர் விருது | லியாகத் அலிகான் |
| இளங்கோவடிகள் விருது | கவிக்கோ ஞானச்செல்வன் (எ) கோ.திருஞான சம்பந்தம் |
| அம்மா இலக்கிய விருது | உமையாள் முத்து |
| சிங்காரவேலர் விருது | அசோகா சுப்பிரமணியன் (எ) சோ.கா. சுப்பிரமணியன் |
| மறைமலை யடிகளார் விருது | புலவர் ப.முத்துகுமாரசுவாமி |
| அயோத்திதாசப் பண்டிதர் விருது | புலவர் வே.பிரபாகரன் |
| முதல்வரின் கணினித் தமிழ் விருது (2018) | முனைவர் த.நாகராசன் |
| சிறந்த மொழிப்பெயர்ப்பாளர் விருதுகள் | |
| மாலன் (எ) வே.நாராயணன், சா.முகம்மது யூசுப், க.ஜ.மஸ்தான் அலி, பேராசிரியர் சிவ. முருகேசன், முனைவர் ந.கடிகாசலம், மரபின் மைந்தன் (முத்தையா), வத்சலா, மருத்துவர் முருகுதுரை, கிருசாங்கினி (எ) பிருந்தா நாகராசன், அ.மதிவாணன். | |
| உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் | |
| இலக்கிய விருது | பெ. இராசேந்திரன் (மலேசியா) |
| இலக்கண விருது | முத்து கஸ்தூரி பாய் (அருணா செல்வம்-பிரான்ஸ்) |
| மொழியியல் விருது | முனைவர் சுபதினி ரமேஷ் (இலங்கை) |

### 7 பேருக்கு திருவள்ளுவர் திருநாள் விருதுகள் அறிவிப்பு

தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.


| விருது மற்றும் விருதாளர்களின் விவரங்கள் | |
|---|---|
| விருது | விருதாளர் |

| | |
|---|---|
| திருவள்ளுவர் விருது – 2020 | ந.நித்தியானந்த பாரதி |
| பேரறிஞர் அண்ணா விருது – 2019 | முனைவர் கோ.சமரசம் |
| பெருந்தலைவர் காமராசர் விருது – 2019 | முனைவர் மா.சு. மதிவாணன் |
| மகாகவி பாரதியார் விருது -2019 | த.தேனிசை செல்லப்பா |
| தமிழ்த்தென்றல் திரு. வி.க.விருது-2019 | முனைவர் சே.சுந்தராசன் |
| முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது | மருத்துவர் மணிமேகலை கண்ணன் |

### ஸ்வச்த்த தர்பன் விருது

- ஒடிசா மாநிலத்தின் பூரி மாவட்டம் ஸ்வச்த்த தர்பன் விருது 2019 ஆண்டின் குடிநீர் துறை மற்றும் துப்புரவு மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மைக்கான கண்டுபிடிப்புக்காக முன் முயற்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டது.
- டெல்லியில் நடைபெற்ற திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நிலையான இந்தியாவை உருவாக்கல் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் இந்த விருது வழங்கப்பட்டது.

### 29வது சரஸ்வதி சம்மன்



- சிந்தி மொழி எழுத்தாளரான வாசுதேவ் மொஹி 29வது சரஸ்வதி சம்மன் விருதிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இந்த விருது பிர்லா நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.
- இந்த இலக்கிய விருது “Chequebook” என்ற சிறுகதை தொகுப்பிற்காக வழங்கப்பட்டது. இந்த சிறுகதை சமூகத்தில் ஒதுக்கப்பட்ட பிரிவினரின் துன்பங்களை பற்றி தெரிவிக்கிறது. சிந்தி மொழி (இந்தோ-ஆரியன்) மொழிகளில் சேர்ந்தது.

### இந்திய கணினி சமூக விருது (CSI)

- சிறப்பான மேலாண்மை மற்றும் நிர்வாக பணியாற்றலுக்காக வழங்கப்படும் கணினி சமூக விருது தெலுங்கானா மாநில மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும், எஸ்.ஏ.பி. நிறுவனத்திற்கும் வழங்கப் பட்டுள்ளது

### கிரிஸ்டல் விருது

- சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் பாலிவுட் நடிகை தீபிகா படுகோனுக்கு “கிரிஸ்டல்“ விருது வழங்கப்பட்டது. மக்களிடையே மனநலம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அவரது செயல்பாட்டை கௌரவிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

### மின்-ஆளுமை விருது

- இந்திய தேர்தல் ஆணையத்தினால் உருவாக்கப்பட்ட ‘C-VIGIL’ மற்றும் Voter Helpline செயலி ஆகிய இரண்டும் மின் ஆளுமை விருது (G-Governance Award) வென்றது.
- இந்த விருது ஒடிசா மாநிலத்தில் உள்ள கலிங்கா தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம், கணினி சமூக இந்தியா மற்றும் சிறப்பு வட்டி குழு 2019ஆம் ஆண்டிற்கான இந்த சிறந்த விருதை வழங்கின.

### பால சக்தி புரஸ்கார் விருது

- பல்வேறு துறைகளில் சாதனைகளை நிகழ்த்தியுள்ள 49 சிறார்களுக்கு பால சக்தி புரஸ்கார் விருதினை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கி கௌரவித்தார்.
- புதுமைக் கண்டுபிடிப்புகள், சமூக சேவை, கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு, வீரதீரச் செயல்கள் உள்ளிட்டவற்றில் சாதனை படைத்துள்ள 5 முதல் 18 வயதுடைய சிறார்களுக்கு ஆண்டுதோறும் பால சக்தி

புரஸ்கார் விருது வழங்கப்பட்டு வருகிறது. விருது பெறுவோருக்கு பதக்கம், ரூ.1 லட்சம் ரொக்கம், சான்றிதழ் வழங்கப்படும்.

- சிறுவயதிலேயே அறிவியல் துறையின் எழுத்தாளராகி உலக சாதனை புரிந்துள்ள ஓம்கார் சிங் என்ற சிறுவனும் விருது பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

### முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி சாம்பியன்ஷிப் ஆஃப் சேஞ்ச் 2019 விருதை வழங்கினார்

- ஜார்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் சமூக சேவைக்காக சாம்பியன்ஷிப் ஆஃப் சேஞ்ச் 2019 விருது வழங்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி இவ்விருதை வழங்கி கௌரவித்தார்.
- சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆர்வலரான அருஷிநிஷங்க் அவர்களுக்கு 2019ஆம் ஆண்டு சாம்பியன் ஆஃப் சேஞ்ச் விருது வழங்கப்பட்டது. 'Sparch Gango initiative' என்ற இவரின் முயற்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டது

### ஹரித் ரத்னா விருது



- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத் துணைவேந்தர் நீ.குமாருக்கு "ஹரித் ரத்னா" விருது வழங்கப்பட்டுள்ளது.

### வீரதீர செயலுக்கான விருது

- வீரதீர செயலுக்கான தேசிய விருதுக்கு இந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ள 10 சிறுமிகள் மற்றும் 12 சிறுவர்களின் பெயரை இந்திய குழந்தைகள் நல கவுன்சில் (ஐசிசிடபுள்யு) அறிவித்தது.
- இதன்படி, கேரளாவில் தீப்பற்றிய சுற்றுலா பஸ் ஒன்றின் கண்ணாடியை உடைத்து 20 பேரை காப்பாற்றிய சிறுவன் ஆதித்யாவுக்கு பாரத் விருது வழங்கப்பட உள்ளது.
- கடலில் தத்தளித்த 3 நண்பர்களை காப்பாற்றும் போது உயிரிழந்த, கோழிக்கோடை சேர்ந்த 16 வயது முகம்மது முசினுக்கு (இறப்புக்குபிறகு) அபிமன்யு விருது வழங்கப்பட உள்ளது. பெண் மற்றும் அவரது மகளை ரயில் விபத்தில் இருந்து காப்பாற்றிய கோழிக்கோடு மாணவர் பதாஹ் விருது பெறுகிறார்.

### சிஸ்கோ இளைஞர் தலைவர் விருது 2019



- Health Set Go என்ற நிறுவனத்தை சேர்ந்த பிரியா பிரகாஷ்-க்கு உலகளாவிய குடிமக்கள் விருதான 'Cisco Youth Leadership Award 2019' வழங்கப்பட்டது. இந்த விருது குழந்தைகளுக்கு சுகாதார உதவியை வழங்கும் 'பள்ளி சுகாதார திட்டத்திற்காக' வழங்கப்பட்டது.
- 'உலகளாவிய குடிமக்கள் விருது' தலைவர்கள், கலைஞர்கள், தொழில் நுட்ப தலைவர்கள் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

### வாழ்நாள் சாதனையாளர் விருது





- மூன்றுமுறை தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் பெற்ற V. சந்திரசேகர் அவர்களுக்கு, ரோட்டரி கிளப் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்துள்ளது. இந்திய டென்னிஸ் விளையாட்டில் புகழ் பெற்ற விஜய் அம்ரீத்ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

### பேரிடர் மேலாண்மை நடவடிக்கை விருது

- உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள பேரழிவு தணிப்பு மற்றும் மேலாண்மை முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரி கே.எம்.சிங், சுபாஷ் சந்திர போஸ் ஆப்டா பிரபாதன் புரஸ்கர் விருதுக்கு

தேர்வு செய்யப்பட்டு உள்ளார். பேரிடர் மேலாண்மைக்காக இவர் மேற்கொண்ட பணிக்காக இந்த விருது வழங்கப்பட்டது. பரிசுத்தொகையாக ரூ.5 லட்சம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### கேரள ஊடக அகாடமி சார்பில் விருது பெறுகிறார் "இந்து" என்.ராம்



- மூத்த பத்திரிகையாளர் "இந்து" என்.ராமுக்கு அவரது 40 ஆண்டுகால பத்திரிகைத்துறை சேவையை பாராட்டி கேரள ஊடக அகாடமியின் சார்பில் தேசிய ஊடக விருது வழங்கப்படுகிறது. இந்த விருதை மார்ச் மாதம் கொச்சியில் நடக்கும் ஊடக மாநாட்டில் கேரள முதல்வர் பினராயி விஜயன் வழங்க உள்ளார்.

### வயசு சென் பதக்கம்

- கடந்த ஆண்டு நடந்த Mi-17 விமானப்படை விபத்தில் இறந்த இந்திய விமானப்படை சேர்ந்த நபிப் சுபேதர் சோம்பீர் அவர்களுக்கு வயசு சென் பதக்கம் வழங்கப்பட்டது.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சௌரியா சக்ரா விருதை மரணமடைந்த நான்கு வீரர்களுக்கு வழங்கினார்.

| விருதுகள் | விவரங்கள் |
|---|---|
| சௌக்ரா விருது | 9 |
| பரம் விஷ்வத் சேவா பதக்கம் | 28 |
| உத்தம் யூத் சேலா பதக்கம் | 4 |
| அதி விஷ்ஷித் சேவா பதக்கம் | 53 |
| யூத் சேவா பதக்கம் | 10 |
| விஷ்ஷித் பதக்கம் | 111 |
| செனா பதக்கம் | 123 |
| நயோசென் பதக்கம் | 5 |
| வயசு சென் பதக்கம் | 14 |

## 1.9 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### லட்சத்தீவின் முதல் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

- யூனியன் பிரதேசமான லட்சத்தீவின் முதல் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கவாரத்தியில் அடிக்கல் நாட்டினார். மேலும் மருத்துவத் துறையில் லட்சத்தீவிலிருந்து பத்மஸ்ரீ (1999) விருது பெற்ற ஒரே பெண்மணியான ரெஹ்மத் பேகம் சைலானியோ அவர்களை ஜனாதிபதி பாராட்டினார்.

### இந்திய-நேபாள எல்லையில் 2வது சோதனைச் சாவடி

- இந்திய-நேபாள எல்லையில், பிஹார் மாநிலம் ரக்சால் – நேபாளத்தின் பீர்கஞ்ச் இடைய கடந்த 2018-ம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி தொடங்கப்பட்டது.
- இந்நிலையில் 2வது ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியை பிரதமர் மோடியும் நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலியும் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தனர்.
- பிஹாரின் ஜாக்பனி – நேபாளத்தின் பிராட்நகர் இடையே இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள இந்த சோதனைச் சாவடி 260 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

### தெற்காசிய நாடுகளின் முதல் மின்-பாஸ்போர்ட்

- பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா குடிமக்களுக்காக இ-பாஸ்போர்ட் வசதியை அறிமுகப்படுத்தினார். இ-பாஸ்போர்ட்களில் ஒரு சிப் இருக்கும். இதில் பாஸ்போர்ட் வைத்திருப்பவரின் பயோ மெட்ரிக் தரவு, புகைப்படம் மற்றும் பிற தகவல்கள் இருக்கும்.
- மின்-பாஸ்போர்ட் வசதியை வழங்கிய 119வது நாடு மற்றும் தெற்காசியாவின் முதல் நாடு பங்களாதேஷ் ஆகும். சர்வதேச சிவில்

ஏவியேஷன் அமைப்பின் கருத்துப்படி உலகின் 490 மில்லியனுக்கு அதிகமான இ-பாஸ்போர்ட்கள் புழக்கத்தில் உள்ளன.

## 1.10 சமீபத்திய புதிய சொற்கள்

**ஆக்ஸ்போர்டு அகராதியின் புதிய பதிப்பில் ஆதார் உள்ளிட்ட 26 வார்த்தைகள் சேர்ப்பு**

- ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் ஆதார், ஹர்த்தால், ஷாதி, ஷால் உள்ளிட்ட 26 இந்திய ஆங்கில வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் 22 வார்த்தைகள் அச்சு பதிப்பிலும் 4 வார்த்தைகள் ஆன்லைன் பதிப்பிலும் இடம்பெற்றுள்ளன.
- ஒட்டுமொத்தமாக 384 இந்திய ஆங்கில வார்த்தைகளும் 1000 இந்திய ஆங்கில சொற்றொடர்களும் புதிய பதிப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன

## 1.10 நியமனங்கள்

**ரிசர்வ் வங்கி புதிய துணை ஆளுநர் நியமனம்**

- ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக மைக்கேல் தேவவிரத பாத்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய பணியாளர் துறை அமைச்சகம் வெளியிட்ட ஆணையில், ‘‘ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக மூன்று ஆண்டுகளுக்கு மைக்கேல் தேவவிரத பாத்ரா பதவி‘‘ வகிப்பார். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தற்போது ரிசர்வ் வங்கி நிதி கொள்கை துறையின் நிர்வாக இயக்குநராக உள்ள பாத்ரா, அந்த வங்கியின் 4வது துணை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**ரஷ்யாவின் அடுத்த பிரதமர் : மைக்கேல் மிஸூஸ்டின்**

- ரஷ்யாவின் அடுத்த பிரதமராக மைக்கேல் மிஸூஸ்டின் பெயரை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் முன்மொழிந்துள்ளார். இவர் தற்போது ரஷ்யா அரசின் வரி வருவாய் துறையில் பணியாற்றி வருகிறார்.
- சமீபத்தில் டிமிட்ரி மெத்வதேவ் பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தது குறிப்பிடத்தக்கது. அந்த பதவிக்கு தற்போது மைக்கேல் மிஸூஸ்டின் தேர்ந்தெடுக்கப் படவுள்ளார்.

**தூய்மை கங்கா திட்டம் : ஜே.வினயன் நியமனம்**

- தூய்மை கங்கா திட்டத்திற்கு நிர்வாக இயக்குநராக ஜே.வினயன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது இந்திய ரயில்வே போக்குவரத்து சேவையில் பணிபுரிகிறார். இந்த பதவியானது மத்திய ஆறுகள் மற்றும் நீர்வள மேம்பாட்டுத் துறையின் செயலாளர் பதவிக்கு இணையானது.

**நேரு அருங்காட்சியக தலைவர் : நிரிபேந்திர மிஷ்ரா**



- புது தில்லியில் அமைந்துள்ள நேரு நினைவு அருங்காட்சியகம் 8 பேர் கொண்ட குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. அந்த குழுவின் தலைவராக முன்னாள் பிரதமரின் தனி செயலாளராக பணியாற்றிய நிரிபேந்திர மிஷ்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- மத்திய கலாச்சார அமைச்சகம் இந்த நியமன அறிக்கையை வெளியிட்டுள்ளது. துணைத் தலைவராக A.சூர்ய பிரகாஷ் நியமிக்கப்பட்டு உள்ளார்.

# 1.11 கலாச்சாரம்

## *"Chapchar Kut"*

- *2020 மிசோர அரசாங்கம், முதலமைச்சர் சோரம் தங்காவின் தலைமையிலான ஏற்பாட்டு குழுவும் இணைந்து, மிசோரமின் கலாச்சார மிகப்பெரிய மற்றும் மிக முக்கியமான திருவிழாவான 'Chapchar Kut 2020' மார்ச் 6 அன்று கொண்டாட முடிவு செய்துள்ளது. இந்த திருவிழாவின் மையக்கருத்து 'Promotion of Mizo' culture and moral code'' என்பதாகும்.*

### பாரம்பரிய நடனம்

- *திரிபுரா மாநிலம், அகர்தலாவில் நடைபெற்ற 42-ஆவது லோக்போரோக் பழங்குடியினர் திருவிழாவில் பாரம்பரிய உடையணிந்து பழங்குடியினத்தவர்கள் நடனமாடினர்.*

### காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் அருகே 18ம் நூற்றாண்டு "சதி கற்கள்" கண்டுபிடிப்பு



- *உத்திரமேரூர் அருகே 18-ம் நூற்றாண்டைச் சேர்ந்த 2 'சதி கற்கள்' கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.*
- *தன் இனக்குழுவை காப்பதற்காக அல்லது தனது ஊரை காப்பதற்காக போரில் வீர மரணம் அடைந்த வீரனோடு, அவனது மனைவி தீ மூட்டி தானும் உயிரை மாய்த்துக் கொள்வது முன்பு வழக்கத்தில் இருந்துள்ளது. இத்தகைய உடன்கட்டை ஏறும் நிகழ்வுக்கு அக்காலத்தில் 'சதி' என்று பெயர்.*

### மாக்பிஹூ திருவிழா

- *அசாம் மாநிலத்தில் 'போஹாலி பிஹு' (உணவுப் பண்டிகை) என்ற பெயரில் அசாமிய காலண்டரின் 'மாக்' மாதத்தின் முதல் நாளாக ஜனவரி 15-ல் கொண்டாடுகிறார்கள்*

### ஜெய்பூர் இலக்கிய திருவிழா

- *ஜெய்பூர் இலக்கிய திருவிழாவின் 13வது பதிப்பு இராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்பூர் நகரில் நடைபெற்றது. இத்திருவிழா ஐந்து நாட்கள் நடைபெற்றது.*
- *புகழ்பெற்ற கவிஞரும் இலக்கிய விமர்சகருமான அரவிந்த் கிருஷ்ணா மெஹ்ரோத் ராவுக்கு மகாகவி சேத்தியா விருது வழங்கப்பட்டது. பரிசுத் தொகையாக ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது.*




## 2.1 சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புகள்

### பொதுத்துறை வேலைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3% இடஒதுக்கீடு

- நீதிபதி ரோஹிண்டன் எஃப் நாரிமன் தலைமையிலான அமர்வு மாற்றுத் திறனாளிகளுக்கு பொது வேளையில் மற்றும் பதவி உயர்வில் 3% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதை தெரிவித்துள்ளது.

## 2.2 மத்திய அரசாங்கம் - பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### ராஷ்டிரிய ஆரோக்ய நிதி திட்டம்

- அரிய வகை நோய்பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக புதிய தேசிய கொள்கையை அரசு சமீபத்தில் வெளியிட்டது. இதில் ஒரு முறை சிகிச்சை அளிப்பதற்காக அரசு சார்பில் 15 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**பயனாளர்கள்**

- வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள இந்திய மக்களின் பெரும்பாலேனோர் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர். 40% இந்திய மக்களும் ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டத்தின் கீழ் அரசு மூன்றாம் நிலை மருத்துமனைகளில் சிகிச்சை பெற இயலும். தேசிய அரிய வகை வியாதிகள் மருத்துவ கொள்கை (NPTRD) மத்திய சுகாதார அமைச்சகத்தால் 2017ம் ஆண்டில் துவக்கப்பட்டது.

### ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை

- "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை திட்டம்" நாடு முழுவதும் ஜீன் 1ஆம்தேதி முதல் அமல்படுத்தப்படும் என்று மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் தெரிவித்தார்.
- அதன்படி, 12 மாநிலங்களில் பொது விநியோக திட்ட பயனாளிகள் அந்த மாநிலங்களில் எங்க வேண்டுமானாலும் பொருள்கள் வாங்க முடியும்.
- 2020, ஜீன் 30ஆம் தேதிக்குள் நாடு முழுவதும் ஒரே குடும்ப அட்டை திட்டம் அமல்படுத்தப்படும் என்று பாஸ்வான் கடந்த ஆண்டு டிசம்பரில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 3. புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

**நில அதிர்வு ஆபத்து மைக்ரோசோனேஷன் மத்திய அரசு அறிமுகம்**

- *புவி அறிவியல் அமைச்சகம் இந்தியாவின் முக்கிய நகரங்களில் நில அதிர்வு அபாய மைக்ரோசோனேஷன் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த திட்டம் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நில அதிர்வு நடவடிக்கைகளின் அபாயங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.*

**நில அதிர்வு ஆபத்து மைக்ரோசோனேஷன்**

- *இது சில காரணிகளின் அடிப்படையில் நில அதிர்வு பாதிப்புக்குள்ளான பகுதிகளைப் பிரிக்கும் செயல்முறையாகும்.*
- *இதில் புவியியல் மற்றும் புவி இயற்பியல் பண்புகள் அடங்கும். நில அதிர்வு, நிலச்சரிவு, பாறை சரிவு, வெள்ளம் போன்றவற்றை கண்காணிக்கும்.*

**பறவைகள் கணக்கெடுப்பு**

- *திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் பறவைகளின் கணக்கெடுப்பின் 10வது பதிப்பு ஜனவரி 24 முதல் 26 வரை நடைபெற உள்ளது. இந்த பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவை இனங்கள் இடம் பெயர்ந்து இங்கே வருகின்றன.*

**புழுதி புயல்**

- *ஆஸ்திரேலியாவின் டப்போ நகரில் வீசிய புழுதிப் புயல், மணிக்கு 107 கி.மீ வேகத்தில் வீசிய புழுதிப் புயலால் டப்போ நகர மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.*

**கரோனா வைரஸ் பாதிப்பு**

- *சீனாவின் பெய்ஜிங், ஷாங்காய் நகரங்களில் கரோனா வைரஸ் பாதிப்பு தீவிரமடைந்து வரும் நிலையில், இந்தியாவில் அது பரவாமல் தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**கரோனா வைரஸ் என்பது**

- *கரோனா வைரஸ் என்பது பாலூட்டி விலங்குகள் மற்றும் பறவைகளில் இருந்து மனிதர்களுக்குப் பரவும் ஒரு வகையான நோய்த் தொற்றாகும். இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் இருமல், மூச்சுக் காற்று, சளி, ரத்தம் மூலமாக பிறருக்கும் அந்த பாதிப்பு பரவ வாய்ப்புள்ளது.*

**புதிய பாம்பினம் கண்டுபிடிப்பு**



- *வங்காள விரிகுடா பகுதியில் புதிய பாம்பினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை இந்திய உயிரியல் ஆய்வின் ஈஸ்டுவரைன் உயிரியல் பிராந்திய மையம் (Estuarine Biology Regional Centre) கண்டறிந்துள்ளது.*
- *இந்திய கடற்கரை பகுதியில் Ophichthus kailashchandrai ஜீன் வகையை சேர்ந்த 8 உயிரினங்கள் கண்டறியப்பட்டுள்ளன.*
- *2019ஆம் ஆண்டில் புதிய Gymnothorax and amanensesis மற்றும் Gymnothorax smithi இந்திய உயிரியல் ஆய்வு மையத்தால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய இனங்கள் ஆகும்.*

**1 டிரில்லியன் மரங்கள் வளர்க்க முயற்சி :**

**உலக பொருளாதார மன்றம்**

- உலக பொருளாதார மன்றம் 2030க்குள் உலக முழுவதும் 1 டிரில்லியன் மரங்களை வளர்ப்பதற்கும், மீட்டெடுப்பதற்கும், பாதுகாப்பதற்கும் "ஒரு டிரில்லியன் மரங்கள் வளர்க்க முயற்சி" திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. உலகளவில் காலநிலை மாற்றத்தை தடுக்கவும், பல்லுயிரிகளை (Biodiversity) மீட்டெடுப்பதை நோக்கமாக கொண்டு இந்த முயற்சி மேற்கொள்ள உள்ளது.

**பயோராக்ஸைப் பயன்படுத்தி கட்ச் வளைகுடாவில் பவளப்பாறைகளை மீட்டெடுக்கும் முயற்சி**

- குஜராத்தின் வனத்துறையின் உதவியுடன் இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனம், முதல் முறையாக பயோராக் அல்லது மினரல் ஆக்ரிஷன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பவளப்பாறைகளை மீட்டெடுக்கும் செயல்முறையை முயன்றுள்ளது.
- கச் வளைகுடாவில் உள்ள மிதாபூர் கடற்கரை யிலிருந்து ஒரு கடல் மைல் தொலைவில் ஒரு பயோராக் அமைப்பு நிறுவப்பட்டது.

# 3.2 இயற்கைப் பேரழிவு - பாதுகாப்பு நடவடிக்கைகள்

**வெப்பமண்டல சூறாவளி டினோ**

- டினோ(Tino) என்ற சூறாவளி பிஜி தீவைத் தாக்கியது. பிஜியின் இரண்டாவது பெரிய தீவான வனுவாலெவு-வை-(Vanua levu) 130-140 கி.மீவேகத்தில் இந்த டினோ சூறாவளி தாக்கியது.



# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### உலக தங்க கவுன்சில் அறிக்கை

- உலக தங்க கவுன்சில் *'World Gold outlook 2020'* என்ற அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- தற்போது இந்திய ரிசர்வ் வங்கி 625.2 டன் தங்கம் இருப்பு வைத்து உள்ளதாக தெரிவித்து உள்ளது. இது நாட்டின் அந்நிய செலவாணியின் 6.6% ஆகும். இதன் மூலம், மற்ற மத்திய வங்கிகளில் இந்தியா உலகில் ஆறாவது இடத்தில் உள்ளது.

### உலகளாவிய சமூக இயக்க அறிக்கை 2020

- உலக பொருளாதார மன்றம் "உலகளாவிய சமூக இயக்க அறிக்கை 2020" முதல் பதிப்பு வெளியிட்டது. இதில் 82 நாடுகளின் அறிக்கையை வெளியிட்டது. இதில் இந்தியா 76வது இடத்தில் உள்ளது. டென்மார்க் 42.7 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது.

| தரநிலை | நாடு |
|---|---|
| 76 | இந்தியா |
| 1 | டென்மார்க் |
| 2 | நார்வே |
| 3 | பின்லாந்த் |
| 4 | ஸ்வீடன் |
| 5 | ஐஸ்லாந்த் |

### இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.8%ஆக இருக்கும்

- நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.8 சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச செலாவாணி நிதியம் (ஐஎம்எஃப்) மதிப்பிட்டுள்ளது.
- இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.1 சதவீதமாக இருக்கும் என்று ஐஎம்எஃப் கடந்த அக்டோபரில் மதிப்பிட்டிருந்த நிலையில், அதனை தற்போது குறைத்துள்ளது. எனினும், அடுத்தடுத்த ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐஎம்எஃப் தலைமை பொருளாதார நிபுணர் கீதா கோபிநாத் ஆவார்.

### *Time to Care* - அறிக்கை

- இந்தியாவில் உள்ள ஒரு சதவீத பெரும் பணக்காரர்களின் மொத்த சொத்து மதிப்பானது 70 சதவீத மக்களின் சொத்து மதிப்பை விட நான்கு மடங்கு அதிகமாக உள்ளது என சமீபத்திய ஆக்ஸ்ஃபாம் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பானது ஓராண்டுக்கு மத்திய அரசு போடும் பட்ஜெட் மதிப்பை விட அதிகம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அந்நிய முதலீடு ஈர்ப்பு 2019-ல் இந்தியா 8வது இடம்

- உலகளாவிய முதலீட்டு போக்கு கண்காணிப்பு அறிக்கை 2020' ஐக்கிய நாடுகள் வணிக மற்றும் மேலாண்மை (UNCTAD) வெளியிட்டுள்ளது. இதில், அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்கும் நாடுகளின் பட்டியலில் முதல் 10 நாடுகளில் இந்தியா 8வதுஇடத்தில் உள்ளது. முதல் மூன்று நாடுகளில் அமெரிக்க, ($ 251 பில்லியன்), சீனா ($ 140 பில்லியன்) சிங்கப்பூர் ($110 பில்லியன்) உள்ளது.

***UNCTAD***

- தொடக்கம் – 1964
- தலைமையிடம் – ஜெனிவா, சுவிட்சர்லாந்து

# 5. அறிவியல்



## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

### அரியவகை வைரஸ் மகாராஷ்டிராவில் கண்டுபிடிப்பு

- இந்தியாவின் முதல் ஏவியன் இன்ஃப்ளுயன்ஸா (Avian Influenza) அல்லது பறவை காய்ச்சல் வகை வைரஸான H9N2 மகராஷ்டிராவில் (Melghat district) 17 வயது சிறுவனுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த தொற்று ஒரு அரிதான H9N2 வைரஸால் ஏற்படுகிறது. இது இன்ஃப்ளுயன்ஸா A வைரஸின்துணைவகையாகும். மனிதனுக்கும் பறவை காய்ச்சல் ஏற்பட வழி வகுக்கிறது.
- இந்த வைரஸ்கள் காட்டு பறவைகளில் காணப்படுகின்றன னமற்றும் சில நாடுகளில் கோழிப் பண்ணையில் காணப்படுகின்றன. புனேவின் தேசிய நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களின் தொற்று நோய்கள் இதழில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது

### 700கோடி ஆண்டுகளுக்கு முந்தைய நட்சத்திரத்துகள்

- 50 ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் விழுந்த விண்கல்லுக்குள் படிந்துள்ள நட்சத்திரத் துகள், 700 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உருவானதாக அமெரிக்க விஞ்ஞானிகள் நவீன கருவிகள் மூலம் தற்போது கண்டறிந்துள்ளனர்.
- சூரியக் குடும்பம் உருவாவதற்கு முன்னரே தோன்றிய அந்த நட்சத்திரத் துகள்தான் தற்போது பூமியில் உள்ள மிகப் பழைய திடப் பொருள் என்று இதற்கான ஆய்வை மேற்கொண்ட சிகாகோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
- நமது பால்வெளி மண்டலம் எவ்வாறு உருவானது என்பதை அந்த நட்சத்திரத் துகள் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்றும் அவர்கள் கூறினர்.

### இந்தியாவில் முதல் சுகோய் 30 படைப்பிரிவு தஞ்சாவூரில் நிறுவப்பட்டுள்ளது

- தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் உள்ள விமானப்படை நிலையத்தில் ஏர் மார்ஷல் அமித் திவாரி, சு-30 போர்படைப் பிரிவை ஜனவரி 20, 2020 அன்று மத்திய அமைச்சர் திறந்து வைக்க உள்ளார் என்று தெரிவித்தார்.
- தெற்கில் அமையவிருக்கும் இந்திய விமானப்படையின் இரண்டாவது முன்னணி போர் படை இதுவாகும் என்று ஏர் மார்ஷல் திவாரி தெரிவித்தார்.

### மாநிலங்களவை தொலைகாட்சி (ம) மக்களவை தொலைகாட்சி இணைக்கத் திட்டம்

- மாநிலங்களவை தொலைகாட்சி (Raja Sabha Television) மற்றும் மக்களவை தொலைகாட்சி (Lok Sabha Television) இணைக்க அறு பேர் கொண்ட குழு மத்திய அரசு அமைத்து உள்ளது. இந்த குழு தனது அறிக்கையை இந்த மாத இறுதிக்குள் மாநிலங்களவை தலைவர் வெங்கய்யா நாயுடு (ம) மக்களவை தலைவர் ஓம் பிர்லாவிடம் சமர்பிக்க உள்ளது. இந்த இணைப்பு பற்றிய இறுதி முடிவு இவர்கள் தான் எடுக்க உள்ளனர்.
- இந்த குழு கடந்த நவம்பர் 7 ஆம் தேதி பிரசார் பாரதியின் தலைவர் சூர்யா பிரகாஷ் தலைமையில் அமைக்கப்பட்டது.

மாநிலங்களவை செயலாளர் A. ராவ், மக்களவை சபை செயலாளர் கனபதி பரத், மாநிலங்களவை தொலைகாட்சியின் நிதி ஆலோசகர் ஷிகா தபாரி (மற்றும்) ஆர். எஸ். டி.வி. எல்.எஸ்.டிவியின் செயலாளர் ஆகியோர் இதன் உறுப்பினர்கள் ஆவர்.

- மக்களவை தொலைக்காட்சி கடந்த 2006 ஆண்டு சோம்நாத் சட்டர்ஜி அவர்களால் தொடங்கப்பட்டது. இதன் பின் மாநிலங்களவை தொலைகாட்சி தொடங்கப்பட்டது.

### இந்தியாவில் காசநோய் கண்டறியும் முறைகள் அதிக துல்லியமானதாக உள்ளதாக: உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு

- இந்தியாவில் காசநோய் கண்டறியும் முறைகளான,இந்தியாவிலேயேஉருவாக்கப்பட்ட மூலக்கூறு பகுப்பாய்வு பரிசோதனை முறை உலகின் மற்ற முறைகளை காட்டிலும் அதிக துல்லியமாக முடிவுகளை அறிவிப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.
- ”Truenet-MTB” என்ற காசநோய் கண்டறியும் முறையை கோவாவை சேர்ந்த நோய் கண்டறியும் மையம் உருவாக்கி விற்பனை செய்து வருகிறது.

### ஹிந்துஸ்தான் உர நிறுவனத்தின் புதிய வகை யூரியா அறிமுகம்

- சோனா அக்லே (SonaUgle) என்ற புதிய வகை யூரியாவை ஹிந்துஸ்தான் உர நிறுவனம் தயாரித்து வழங்க மத்திய உர மற்றும் இராசாயன துறை அமைச்சர் சதானந்த கவுடா வெளியிட்டார்.
- யூரியா உற்பத்தியில் இந்தியாவின் உற்பத்தி திறனை அதிகரித்து தன்னிறைவு அடைவதற்காக இந்த புதிய ரகத்தை அறிமுகம் செய்துள்ளார்.

**சமீபத்திய நடவடிக்கை**

- யூரியா உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி செல்வதற்காக சிந்தி, கோரக்பூர், பரவுனி ஆகிய பகுதிகளில் யூரியா உற்பத்தி மையத்தை மத்திய அரசு துவங்கியுள்ளது. இதன் மூலம் நாட்டின் உற்பத்தி திறனை 63.5 இலட்சம் டன் அளவுக்கு உயர்த்த இயலும்.

### அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லும் கே-4 ஏவுகணை சோதனை வெற்றி

- நீர்மூழ்கி கப்பலில் இருந்து அணு ஆயுதங்களை எடுத்துச் சென்று எதிரி இலக்குகளைத் தாக்கும் கே-4 ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
- ஆந்திர மாநில கடற்பகுதியில் இந்த சோதனை நடைபெற்றது. இந்த ஏவுகணை 3,500 கி.மீ. தொலைவு வரை உள்ள இலக்குகளைத் துல்லியமாக தாக்கி அழிக்கும். நீருக்கு அடியில் இருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டது.
- இந்திய பாதுகாப்புத் துறை ஆய்வு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) இந்த ஏவுகணையை உருவாக்கியது.
- கே-4 ஏவுகணை இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது நீர்மூழ்கி ஏவுகணையாகும்.
- 700 கி.மீ. தொலைவு வரையிலான இலக்குகளைத் தாக்கும் பிஓ-5 ஏவுகணை இந்தியாவின் முதல் நீர்மூழ்கி ஏவுகணை என்பது குறிப்பிடத்தக்கது.

### வேலைவாய்ப்பு தொடர்பான செயலி

- சட்டீஸ்கர் மாநில முதலமைச்சர் பூபேஷ் பகெல் வேலைவாய்ப்பு தொடர்பான செயலி 'Rojarsangi' தொடங்கி வைத்தார். இச்செயலி அம்மாநில திறன் மேம்பாட்டு ஆணையம் உருவாக்கி உள்ளது. ராய்பூரில் நடைபெற்ற இளைஞர் திருவிழா 2020ல் முதலமைச்சர் இதை வெளியிட்டார்.
- பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு வழங்குவதற்காக இந்த செயலி வடிவமைக்கப்பட்டது.

### ககன்யான் திட்டத்தில் பெண் ரோபோ அனுப்பப்படும்

- பெங்களூரில் நடைபெற்ற 'மனித விண் பயணம் முற்றாய்வின் தற்கால சவால்கள் மற்றும் எதிர்காலப் போக்குகள்' என்ற

*கருத்தரங்கை கே.சிவன் தொடங்கி வைத்தார்.*

- *இதில் ககன்யான் திட்டத்தின் முன்னோட்டமாக, விண்ணுக்கு செலுத்தப்படும் ஆளில்லா விண்கலத்தில் "வியோமா மித்ரா (விண் தோழன்)" எனப்படும் பெண் ரோபோ அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார்.*

### உலகின் முதல் வாழ்க்கை, சுய குணப்படுத்தும் ரோபோ

*(World's first living, Self-Healing robots)*

- *வெர்மான்ட் பல்கலைக்கழகம் மற்றும் டஃப்ட்ஸ் பல்கலைக்கழகம் விஞ்ஞானிகள் தவளைகளின் ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி உலகின் முதல் வாழ்க்கை மற்றும் சுய-குணப்படுத்தும் ரோபோக்கள் ஜெனோ போட்களை உருவாக்கியுள்ளனர். இதற்கு ஆப்பிரிக்க கிளாவ்டு தவளையின் ஸெ்டெம் செல்லின் பெயரான ஜெனோபஸ் லேவிஸ் என பெயரிடப்பட்டு உள்ளது.*
- *0.04 அங்குலம் கொண்ட இந்த குறுகிய வகை ரோபோக்கள் மனித உடலில் பயனித்து, நோய்கள் பாதித்துள்ள பகுதிகளுக்கு மருந்துகளை கொண்டு சென்று நோய்களை குணப்படுத்தப்படுகின்றது*

### பி.எஸ்.எல்.வி 2022

- *தொழில்துறையால் முழுமையாக கட்டப்பட்ட முதல் துருவ செயற்கைகோள் ஏவும் வாகனம். (பி.எஸ்.எல்.வி) 2022ஆம் ஆண்டில் வெளியிடப்படும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் தலைவர் கே.சிவன் தெரிவித்தார்.*
- *ஏற்கனெவே தொழில்துறையில் வடிவமைக்கப்பட்ட முதல் சிறிய செயற்கைகோள் (Small Satelite launch Vehicle) ஏப்ரல் மாதம் செலுத்த உள்ளதாக தெரிவித்தார். அவை ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஏவபட உள்ளது.*
- *எஸ்.எல்.வி.க்கு ஏவுதளவசதி அமைப்பதற்காக தெற்கு தமிழ்நாட்டின் குலசேகரபட்டினத்தில் 2,300 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தும் பணி நடந்து வருவதாக தெரிவித்தார்.*

### "Ghaznavi" பாலிஸ்டிக் ஏவுகணை பாகிஸ்தான் செலுத்தியது

- *அணுசக்தி திறன் கொண்ட மேற்பரப்பு-முதல்-மேற்பரப்பு பாலிஸ்டிக் ஏவுகணை "Ghazhavi' இஸ்லாமாபாத்தில் இருந்து பாகிஸ்தான் செலுத்தியது. இந்த ஏவுகணையின் தாக்கு திறன் 290கி.மீ ஆகும்.*
- *கடந்த 2019ஆம் ஆண்டு பாகிஸ்தான் Shaheen-1 என்ற மேற்பரப்பு-முதல் மேற்பரப்பு தாக்கும் திறன் கொண்ட ஏவுகணை சோதனை மேற்கொண்டது.*

### பார்வை குறைபாடுள்ள மாணவர்களுக்கு கல்வி ரீதியாக உதவியாக செயலி

- *Swaekhan (Self-writing) என்ற செயலி பார்வையற்றோர்களுக்கு கல்வி வழியில் உதவ நிவாந்த் ஆன்ந் முக்தா விகாஷல்யா உருவாக்கி உள்ளார். பூனேவை சேர்ந்த ஜோஸ் மென்பொருள் நிறுவனம் இச்செயலியை உருவாக்கி உள்ளது.*

# 5.2 ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

## *Aspire' Portal*

- *மத்திய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் பிரபுஹரம் சௌதரி "Aspire' என்ற போர்டலை தொடங்கி வைத்தார். இந்த போர்டல் யுனிசெஃப் உதவியுடன் தொடங்கி வைக்கப்பட்டது.*
- *9 முதல் 12ம் வகுப்பு வரை உள்ள அரசு பள்ளி மாணவர்கள் உதவுவதற்காக இந்த போர்டல் வடிவமைக்கப்பட்டது.*
- *Aspire என்ற இந்த போர்டல் எதிர்கால வாய்ப்புகளை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். இதில் மாணவர்கள் கல்லூரி கட்டணம், பாடம், சேர்க்கை முறைகள் மற்றும் தேசியம் மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து கல்லூரிகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியும்*

### போல்நெட் 2.0 தளம்

- *காவல் துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் தங்களுக்குள் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையில் மேம்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்ட 'போல்நெட் 2.0' தளத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடக்கிவைத்தார்.*
- *'போல்நெட்' தளத்தின் மூலம் காவல் துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் சட்டம்-ஒழுங்கு விவகாரம் தொடர்பாகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றனர்.*

### *VGM* செயலி

- *உத்தரபிரதேசத்தை சேர்ந்த மிருத்யுஞ்சய்சிங் மற்றும் பிரியாராய் ஆகியோர் பெண்கள் பாதுகாப்பு உதவியாக 'Very Good Morning' (VGM) என்ற செயலியை உருவாக்கி உள்ளனர். இதன் மூலம் பெண்களுக்கு எதிரான குற்றங்களிலிருந்து தங்களை பாதுகாக்க உதவும் என்று தெரிவித்துள்ளனர்.*

### நெடுஞ்சாலைத் திட்டங்களை குறித்த தகவல் பெற புதிய இணையதளம்

- *நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளை கண்காணிப்பதற்காக, 'காடி' (GATI) என்ற பெயரில் புதிய இணையதளத்தை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் உருவாக்கியுள்ளது.*
- *இந்த இணையதளத்தை தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி அறிமுகம் செய்து வைத்தார்.*

### பன்மொழி குரல்வகை செயலி

- *இந்தியாவில் முதல் முறையாக, இந்தியாவின் முன்னணி இந்திய வங்கிகளில் ஒன்றான சிட்டி யூனியன் வங்கி பன்மொழி குரல் மூலம் இயக்கும் மொபைல் வங்கி செயலியை அறிமுகம் செய்துள்ளது.*
- *இந்த வங்கி 'Ask Lakshmi' என்ற பேச்சு தளத்தை (Chat box) அறிமுகம் செய்துள்ளது. இது தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு போன்ற மொழிகளில் வாடிக்கையாளர்கள் பயன்படுத்த முடியும்.*

# 6 தினசரி தேசிய நிகழ்வு



### இந்திய பாரம்பரியம் பற்றிய டிஜிட்டல் கண்காட்சி

- *மாநில கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் இந்திய பாரம்பரியம் பற்றிய கண்காட்சியை டெல்லியில் துவங்கி வைத்தது. மேலும் இதன் இந்திய பாரம்பரியம் பற்றிய முதல் டிஜிட்டல் கண்காட்சியை பிப்ரவரி 15, 2020 துவங்க உள்ளது.*
- *நாட்டின் மக்கள் சமூக கலாச்சாரம், கட்டிடக்கலை போன்றவற்றை இந்த கண்காட்சியின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.*
- *இந்த கண்காட்சியில் பாரம்பரிய கட்டிடக்கலை பார்க்க 3D நகல் மூலம் காண 'VIRAASAT' என்ற பெயரில் ஒரு காட்சி அமைக்கப்பட்டுள்ளது. 'VIRAASAT' என்பது ஹிந்தியில் பாரம்பரியம் என்பது பொருள்.*

### இயற்கை பாதுகாப்பதற்கான சர்வதேசிய ஒன்றியத்தை உருவாக்கியுள்ள முதல் மாநிலம்

- *அருணாச்சல பிரதேசம் மாநிலம் இயற்கை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியத்துடன் இணைந்து IUCN "சிவப்பு பட்டியலை" (real listing) உருவாக்கி உள்ளது. இந்த பட்டியலை உருவாக்கியுள்ள இந்தியாவின் முதல் மாநிலம் அருணாச்சல பிரதேசம் ஆகும்.*

**இயற்கை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN)**

- *தொடக்கம் – 5 அக்டோபர் 1948*
- *தலைமையகம் – கிளாண்ட், சுவிட்சர்லாந்து*
- *இதன் முக்கிய நோக்கம் அழிந்து வரும் உயிரினங்களை பாதுகாப்பதற்காக தொடங்கப்பட்ட சர்வதேச அமைப்பாகும்.*

### 23வது தேசிய இளைஞர் திருவிழா

- *23வது தேசிய இளைஞர் திருவிழா உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்றது. மத்திய இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் மற்றும் மாநில அரசு இணைந்து இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்தது.*
- *இதன் மையக்கருத்து 2020 : "Fit Youth, Fit India" என்பதாகும்.*

### "Globalizing Indian Thought" சர்வதேச மாநாடு

- *"Globalizing Indian thought" என்ற சர்வதேச மாநாடு கோழிக்கோட்டில் நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.*
- *இந்த மாநாட்டின் நோக்கம் உலகளவில் இந்திய பொருளாதாரத்தை முதல் மூன்று இடத்திற்குள் கொண்டு வருதல் ஆகும்.*
- *இந்தியா 2025 ஆம் ஆண்டுக்குள் இந்திய பொருளாதாரத்தை 5 டிரில்லியன் டாலர் உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.*

### மெகா எரிபொருள் பாதுகாப்பு முகாம்

- *எரிபொருள் பாதுகாப்பு தொடர்பான மெகா முகாம் 'Saksham' என்ற பெயரில் டெல்லியில் நடைபெற்றது. இதற்கு பெட்ரோலிய பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு ஏற்பாடு செய்தது.*
- *பெட்ரோலிய பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு மற்றும் என்.சி.ஆர்.சி.டி இணைந்து எரிபொருள் பற்றிய காமிக் புத்தகம் தயாரித்து உள்ளது. இந்த முகாமின் மையக்கருத்து : " Fuel Conservation என்பதாகும்.*

### திரிபுராவில் வசிக்கும் மிஸோரம் மாநில “புரு” பழங்குடியினத்தவர்க்கு நிரந்தர குடியுரிமை

- மிஸோரமிலிருந்து இடம்பெயர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக திரிபுராவில் வசித்துவரும் 30ஆயிரத்துக்கும் மேற்பட்ட ‘புரூ’ பழங்குடியினத்தவர்களுக்கு திரிபுராவில் நிரந்தர குடியுரிமையை வழங்கும் ஒப்பந்தம் உள்துறை அமைச்சர் அமித் ஷா முன்னிலையில் கையெழுத்தானது.
- திரிபுரா, மிஸோரம், மத்திய அரசு ஆகியவற்றுக்கு இடையே இந்த ஒப்பந்தம் தில்லியில் கையெழுத்தானது.
- மிஸோரமிலிருந்து வெளியேறி திரிபுராவில் கடந்த 1997-ஆம் ஆண்டிலிருந்து அகதிகளாக புரூ பழங்குடியினத்தவர்கள் வாழ்ந்து வந்தனர்.
- இந்த ஒப்பந்தம் மூலம் அவர்கள் திரிபுரா மாநிலத்தவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

### கே9 வஜ்ரா பீரங்கி செயல்பாட்டை தொடக்கி வைத்தார் ராஜ்நாத் சிங்

- “இந்தியாவில் தயாரிப்போம்“ திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட 51வது கே-9 வஜ்ரா-டி ரக பீரங்கியின் செயல்பாட்டை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடக்கி வைத்தார்.
- மத்திய அரசின் “இந்தியாவில் தயாரிப்போம்“ திட்டத்தின் கீழ், கே-9 வஜஜ்ரா-டி ரக பீரங்கிகள் தயாரிப்புக்கான ரூ.4,500 கோடி மதிப்புடை ஒப்பந்தம் கடந்த 2017-ஆம் ஆண்டு எல் & டி ஆயுத தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது.
- 50 டன் எடையுள்ள கே-9 வஜ்ரா-டி ரக பீரங்கி, 47 கிலோ எடை கொண்ட வெடிபொருள்களை 46கி.மீ. தொலைவு வரை வெவ்வேறு இடங்களில் உள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் திறன் கொண்ட பீரங்கியாக இது உள்ளது.

### பிளாக் செயின் தொழில்நுட்ப மையம்

- தேசிய தகவல் மையம் பெங்க@ரில் பிளாக் செயின் தொழில்நுட்ப மையம் அமைத்து உள்ளது. இந்த மையத்தை மத்திய அமைச்சர் ஸ்ரீ ரவிசங்கர் பிரசாத் திறந்து வைத்தார். இதன் முக்கிய நோக்கம் ஆர்வமுள்ள அனைத்து பங்குதாரர்கள் தங்கள் அனுபவங்களை இந்த மையத்தில் பகிர்ந்து கொள்ளுதல் ஆகும்.
- இந்த மையம் பிளாக் செயின் தொழில் நுட்பம் அடிப்படையிலான கருத்துகளை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க நிறுவனத்துடன் பகிர்ந்து கொள்ளும்.

### *ELECRAMA* இந்திய மின் தொழில்காட்சி

- ELECRAMA 2020 நொய்டாவில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இந்திய மின் தொழில் துறையின் புதுமைகளையும் சாதனைகளையும் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த கண்காட்சி இந்திய மின் மற்றும் மின்னணு உற்பத்தியாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்தது. இதற்கு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவு, அமைச்சகம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகமும் ஆதரவு தெரிவித்தது.
- இதன் மூலம் இந்தியத் தொழில் துறையை உலகதொழில் அமைப்புகளுடன் இணைக்க ஒரு தளமாக செயல்படுகிறது.

### விங்க் இந்தியா 2020

- ஆசியாவின் மிகப்பெரிய சிவில் விமானப் போக்குவரத்து நிகழ்வான “விங்க் இந்தியா 2020“ தொழில்நுட்ப கூட்டம் பெங்களூரில் நடைபெற்றது.
- சிவில் ஏவியேஷன் நிகழ்வு 2020 மார்ச் மாதம் ஹைதராபாத்தின் பேகம் பேட்டை விமான நிலையத்தில் நடைபெற உள்ளது. இதன் மையக்கருத்து “Flying for All” என்பதாகும்.


**விமானத்துறைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள்**

- 2024க்குள் உலகளவில் மூன்றாவது பெரிய விமான சந்தையாக இந்தியா திகழ வேண்டும்.
- 2027க்குள் இந்திய விமானங்களின் எண்ணிக்கை 1,100 ஆக உயர்த்தப்பட வேண்டும். இந்திய விமான நிலையங்களில் சரக்கு போக்குவரத்து 2032க்குள் 11.4 மெட்ரிக் டன் உயர்த்த வேண்டும்.

### உத்தரகண்ட்: ரயில் நிலையங்களில் உருதுக்கு பதிலாக சமஸ்கிருதம்

- உத்தரகண்ட் ரயில் நிலையங்களில் உள்ள பெயர்பலகைகளில் உருது மொழிக்கு பதிலாக, அந்த மாநிலத்தின் இரண்டாவது அலுவல் மொழியான சமஸ்கிருதம் பயன்படுத்தப்பட உள்ளது.
- ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளும் தேவநாகரி எழுத்து பிரதியில் எழுதப்படுவதால், பெயர் பலகைகளில் ரயில் நிலைய பெயர்கள் சமஸ்கிருத மொழியில் எழுதப்படுகிறது.

### முக்கோண வடிவில் புதிய நாடாளுமன்றம்



- புதிய நாடாளுமன்றக் கட்டிடமானது முக்கோண வடிவத்தில் அமையவுள்ளதை போன்ற மாதிரி வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.
- சுமார் 1,350 பேர் வரை அமரக் கூடிய வகையில் இந்தப் புதிய நாடாளுமன்றம் அமையவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
- டெல்லியில் தற்போது பயன்பாட்டில் உள்ள நாடாளுமன்றக் கட்டிடமானது ஆங்கிலேயேர் ஆட்சிக்காலத்தில் 1927-ம் ஆண்டு கட்டப்பட்டது ஆகும். எட்வின் லூடெய்ன்ஸ், ஹெர்பெர்ட் பேக்கர் ஆகிய இங்கிலாந்து பொறியாளர்கள் இந்தக் கட்டிடத்தை வடிவமைத்திருந்தனர்.
- இந்தப் புதிய கட்டிடத்திற்கான ஒப்பந்தமானது குஜராத்தில் உள்ள ‘ஹெச்.சி.பி. டிசைன்' என்ற நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது

### இந்தியாவின் முதல் மாதிரி விளையாட்டு கிராமம்

- உத்தரபிரதேசத்தில் உள்ள தொழில்நுட்ப மேலாண்மை நிறுவனத்தின் (IMT) சார்பில் “ஆதர்ஷ் கேல்கிராம்“ திட்டத்தின் கீழ் “இந்தியாவின் முதல் மாதிரி விளையாட்டு கிராமம்“ இரண்டு கிராமங்களை உருவாகி உள்ளது. அவை “பகதூர்பூர்“ மற்றும் “கேரி வேரன்“ என்ற கிராமங்கள் ஆகும்.
- தொழில்நுட்ப மேலாண்மை நிறுவனம் (IMT) “Sports: A Way of Life” என்ற தன்னார்வ நிறுவனத்துடன் இணைந்து இதை செயல்படுத்தி உள்ளது. விளையாட்டு கலாச்சாரத்தை வளர்ப்பது நாட்டில் விளையாட்டு கல்வியறிவை அதிகரிப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

### உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்க யுஜிசி புதிய திட்டம்

- நம் நாட்டின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை தற்போது 26 சதவீதமாக உள்ளது. 2030-ம் ஆண்டுக்குள் இதை 50 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயித்து மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் ஒரு மாணவர் ஒரே நேரத்தில் தனக்கு விருப்பமான வெவ்வேறு கல்லூரிகளில் படித்து பட்டம் பெற முடியும். இந்நிலையை மாற்றுவதற்காகவே ‘நாக் வங்கி’ திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனி கணக்கு தொடங்கப்பட்டு, அவர்களது கல்வி விவரங்கள் பதிவு செய்யப்படும். ஒவ்வொரு பருவத்திலும் பாடவாரியாக மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள், என்சிசி, என்.எஸ். எஸ், விளையாட்டு, பிறமொழி அறிவு உட்பட கூடுதல் கல்வித்தகுதிகள் மற்றும் சிறப்பு தகுதிகளும் அவர்களின் ‘நாக்’ வங்கி கணக்கில் ‘வரவு’ வைக்கப்படும்.
- உடல்நலக் குறைபாடு காரணமாக இடைநின்ற மாணவர்களும் விரும்பிய கல்லூரிகளில் மீண்டும் படிப்பைத் தொடரலாம். இதற்கு அதிகபட்சமாக 8 ஆண்டுகள் அவகாசம் தரப்படும்.

### தேசிய நீர்நிலைத் திட்டத்தின் கீழ் நீர்திறன் கணக்கெடுப்பு

- *“மத்திய மற்றும் மாநில அரசின் நீர் துறையின் செயல்திறன் இலக்கு 2019“ என்ற அறிக்கையை மத்திய ஜல்சக்தி அமைச்சகம் வெளியிட்டது. இதில் சிறப்பாக செயல்திறன் கொண்ட மாநிலங்களில் குஜராத் மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. தேசிய தலைநகரான டெல்லி மோசமான மாநிலங்கள் பட்டியலில் உள்ளது.*

### முதல் கிரிஷி மந்தன் 2020

- *அகமதாபாத்தில் நடைபெற்ற ஆசியாவின் மிகப்பெரிய உணவு வேளாண் வணிக மற்றும் வளர்ச்சி உச்சி மாநாட்டில் முதல் கிரிஷி மந்தன் 2020 நிகழ்ச்சி நடைபெற்றது. இதை அகமதாபாத் இந்திய மேலாண்மை நிறுவனம் (IIMA) ஏற்பாடு செய்தது.*

### தேசிய ஸ்மார்ட் அப் ஆலோசனைக்குழு

- *இந்திய அரசு தேசிய தொழில்முனைவு ஆலோசனை குழுவை (National StartUp Advisory Council) உருவாக்கி உள்ளது.*
- *இந்தியாவில் புதுமை மற்றும் தொழில் முனைவு, வளர்ப்பதற்கு ஒரு வலுவான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக இந்த சபை அமைக்கப்பட்டு உள்ளது.*
- *தேசிய தொழில்முனைவு ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் அமைப்பு*
- *வர்த்தக அமைச்சர் (Commerce Minister) தேசிய தொழில் முனைவு ஆலோசனை குழுவின் தலைவராக இருப்பார்.*
- *இந்தசபை இந்தியஅரசால் பரிந்துரைக்கப்படும் அதிகாரப்பூர்வமற்ற உறுப்பினர்களையும் (non-official member) உள்ளடங்கும்.*
- *இதில் அதிகாரப்பூர்வமற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்*

### விளைநிலங்களில் உயிரிழக்கும் விவசாயிகளின் குடும்பத்துக்கு நிதியுதவி

- *உத்தரப் பிரதேசத்தில் விளைநிலங்களில் பணிபுரியும்போது விவசாயிகள் உயரிழந்தாலோ அல்லது காயம் ஏற்பட்டு மாற்றுத்திறனாளி ஆனாலோ, அவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு (Mukhya Mantri Krishak Durghatna Kalyan Yojana) அந்த மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.*
- *அவர்களது குடும்பத்தினருக்கு அரசு சார்பில் ரூ.5 லட்சம் நிவாரண உதவி வழங்கப்படும். அவர்கள் விளைநிலத்தில் பணிபுரியும்போது காயம் ஏற்பட்டு 60 சதவீதம் அல்லது அதற்கு மேலான அளவுக்கு உடல் பாதிப்பு ஏற்பட்டால் ரூ.2 லட்சம் நிவாரண உ தவி வழங்கப்படும்.*

### ஜனநாயக குறியீட்டில் இந்தியா 51வது இடத்திற்கு சரிந்தது

*(India falls to 51st position in EIU Democracy Index )*

- *2019 ஜனநாயக குறியீட்டின் உலகளாவிய தரவரிசையில் இந்தியா 10 இடங்கள் சரிந்து 51வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாக பொருளாதார புலனாய்வு பிரிவு என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.*
- *பிரிட்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் பொருளாதார புலனாய்வு பிரிவு, கடந்த 2019ம் ஆண்டிற்கான உலகளாவிய ஜனநாயக குறியீட்டு பட்டியலை வெளியிட்டுள்ளது.*
- *இந்த பட்டியலில் பாகிஸ்தான் 104-வது இடத்திலும், இலங்கை 69-வது இடத்திலும், வங்காளதேசம் 80-வது இடத்திலும் உள்ளன. சீனா 15-வது இடத்திலும், வடகொரியா கடைசி இடமான 167-வது இடத்திலும் (சர்வாதிகார ஆட்சிப் பிரிவு) உள்ளன.*

- ஜனநாயக குறியீட்டு பட்டியலில் முதல் 10 இடங்களில் உள்ள நாடுகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| நார்வே | ஐஸ்லாந்து |
| ஸ்வீடன் | நியூசிலாந்து |
| பின்லாந்து | அயர்லாந்து |
| டென்மார்க் | கனடா |
| ஆஸ்திரேலியா | சுவிட்சர்லாந்து |

### விவசாய நிலங்களை குத்தகைக்கு விடுத்த நாட்டின் முதல் மாநிலம்

- விவசாய நிலங்களை குத்தகைக்கு எடுக்கும் கொள்கையை உருவாக்கிய இந்தியாவின் முதல் மாநிலம் உத்தரகாண்ட் ஆகும்.
- இந்த குத்தகைக் கொள்கையின் கீழ் 30 ஆண்டு குத்தகைக்கு நிலம் கொடுப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட விவசாயி அந்த நிலத்திற்கான வாடகையை பெறுவார்.
- பண்ணை நிலங்களை சுற்றுலா நிலங்களை குத்தகைக்கு எடுக்க மாவட்ட நீதிபதியிடம், (District Magistrate) அனுமதி பெற்று பெறலாம்.

### கார்பன் வெளிப்படுத்துதல் திட்டம் : இந்திய 5வது இடம்

- கார்பன் வெளியிடப்படுதல் திட்டம், பல்வேறு நாடுகளின் கார்பன் குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளின் வருடாந்திர அறிக்கை ஒரு இலாப நோக்கமற்ற ஒழுங்கு முறை உலகளாவிய அறிக்கை வெளியிட்டு உள்ளது.
- அறிக்கையின்படி, கார்பன் குறைப்பு தொடர்பான நிறுவன பொறுப்புகளின் அடிப்படையில் நாடுகள் தரவரிசைப் படுத்தப்பட்டன.

### மாணவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடல்

- பொதுத்தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் ஆகியவற்றை எழுதவுள்ள மாணவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். “தேர்வு குறித்து விவாதம்“ என்ற தலைப்பில் மூன்றாவது முறையாக (PariskashaPeCharcha 2020) பிரதமர் மோடி மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

### மாநிலங்கள் உருவாகிய தினம்

- மேகாலயா, மணிப்பூர், திரிபுரா ஆகிய மாநிலங்கள் 48வது உருவான தினத்தை கொண்டாடின. இந்த மாநிலங்கள் ஜனவரி 21, 1972ஆம் ஆண்டு வடகிழக்கு மாநிலங்கள் மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.

### தேசிய பழங்குடியின இளைஞர்கள் திட்டம்

- 12வது தேசிய பழங்குடியின இளைஞர்கள் திட்டத்தை புதுச்சேரியின் துணைநிலை ஆளுநரான டாக்டர் கிரண்பேடி (20 ஜனவரி) தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சி ஒருவாரம் நடைபெற உள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சலால் பாதிக்கப்பட்ட 200 இளைஞர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.
- இந்த நிகழ்ச்சியை நேருகேந்தரசங்கதான் மற்றும் புதுச்சேரி அரசு இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

### இந்தியாவில் மிகவும் மாசு அடைந்த நகரம்

- 2018ஆம் ஆண்டிற்கான க்ரீன்பீஸ் இந்தியா தேசிய சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் அடிப்படையில் (NAMP) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- இதன் அறிக்கைபடி நிலக்கரி சுரங்கங்களுக்கு பெயர் பெற்ற மாநிலமான ஜார்கண்டின் ஜவுரியா பகுதியில் 2018 ஆம் ஆண்டில் PM10 (Particulate Matter) மாசுக்கள் அதிகம் உள்ளதாக தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் 287 நகரங்கள் அறிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

### ஸ்கோச் நல் ஆளுமை 2019 தரவரிசை

- ஸ்கோச் ஸ்டேட் ஆஃப் கவர்னன்ஸ் (SKOCH State of Governance 2019) அறிக்கையின் படி, சுகாதாரம், கல்வி, மின்சாரம் மற்றும் மின் ஆளுமை பிரிவுகளில் சிறந்த செயல்திறனில் குஜராத் மாநிலம் முதல் இடம் பிடித்துள்ளது. 22 வேறுபட்ட அளவுகளை கொண்டு மாநிலங்கள் தரவரிசைப்படுத்தப்பட்டன.

| தரவரிசை | மாநிலம் | திட்டம் |
|---|---|---|
| 1 | குஜராத் | 104 |
| 2 | மகாராஷ்டிரா | 50 |
| 3 | மேற்கு வங்காளம் | 20 |
| 11 | தமிழ்நாடு | |

**ஸ்கோச் (SKOCH)**

- இது குர்கான் (ஹரியானா) அடிப்படையிலான சிந்தனை குழுவாகும். இது 1997 முதல் செயல்படுகிறது. சமூக பொருளாதார சிக்கல்களை கையாள்கிறது.

## ஐக்கிய நாடுகளின் எய்ட்ஸ் திட்டத்தில் இந்தியா பங்கேற்பு

- உலக பொருளாதார மன்றத்தில் நடந்த ஐக்கிய நாடுகளின் எய்ட்ஸ் திட்டத்தில் இந்தியா பங்கேற்றது. இந்த திட்டத்தின் மையக்கருத்து *'Access for all: Leveraging Innovations, Investments and Partnerships for Health".*
- சுகாதாரத் துறையில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கான சுகாதாரத் தேவைகள், தொழில் நுட்பங்கள் மற்றும் தீர்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்திய குழுவை மத்திய கப்பல், இராசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா வழி நடத்தினார்.

## அரசுப் பள்ளிகளில் அரசமைப்புச் சட்ட முகப்புரை வாசிப்பு கட்டாயம்

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் சனிக்கிழமைதோறும் அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையை மாணவர்கள் கட்டாயமாக வாசிக்க வேண்டும் என்று அந்த மாநில அரசு அறிவித்துள்ளது.
- அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையை ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைதோறும் மாணவர்கள் கண்டிப்பாக வாசிக்க வேண்டும் என்று பள்ளிக் கல்வி துறை (ஜனவரி 22) அறிக்கை வெளியிட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் மின்னனு கழிவுகள் மருத்துவமனை

- இந்தியாவின் முதல் மின் கழிவுகள் மருத்துவமனை மத்திய பிரதேச மாநிலம் போபாலில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மருத்துவமனை வீடு மற்றும் வணிக பிரிவுகளிலிருந்து மின்னனு கழிவுகளை பிரிக்கும் செயலில் ஈடுபடும்.
- கணினி, மொபைல், சார்ஜர் போன்ற அனைத்து வகையான மின் கழிவுப் பொருட்கள் இந்த மருத்துமனையில் பிரிக்கப்படும்.

## இந்தியாவின் முதல் உலகளாவிய அறிவியல் கண்காட்சி

- டாக்டர் ஜிஜேந்திர சிங், டெல்லியில் உள்ள தேசிய அறிவியல் மையத்தில் "விக்யான் சமகம்" (Vigyan Samagam) என்ற பெயரில் இந்தியாவின் முதல் உலகளாவிய அறிவியல் கண்காட்சியை தொடங்கி வைத்தார். இக்கண்காட்சி ஜனவரி 21 முதல் மார்ச் 20 வரை நடைபெற உள்ளது.
- இக்கண்காட்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மையம் மற்றும் தேசிய அறிவியல் அருங்காட்சியக கவுன்சில் ஆகியவை ஏற்பாடு செய்தது.

## நாட்டின் முதல்: விலங்குகளின் போர் நினைவு சின்னம்

- உத்தரபிரதேசத்தின் மீரட்டில் நாய்கள், குதிரைகள், கழுதைகள் போன்ற விலங்குகளின் சேவையை போற்றி நாட்டின் முதலாவது போர் நினைவுச் சின்னத்தை அமைக்கப்பட உள்ளதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

## ஜம்மு & காஷ்மீர் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத மாநிலம்

- ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த ஸ்ரீநகர் நகராட்சியில் திறந்தவெளி கழிப்பிட அற்ற நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு & காஷ்மீர் மாநில அரசிற்கு மத்திய வீட்டு மற்றும் நகர விவகார அமைச்சகம் திறந்தவெளி கழிப்பிட அற்ற மாநிலம் என்ற ஸ்வச்தா சான்றிதழ் வழங்கியுள்ளது. மேலும் 'OPEN DEFECATION FREE STATE' பட்டியலில் இணைந்துள்ளது. நாட்டின் தூய்மையான நகரங்கள் பட்டியலில் ஸ்ரீநகர் 45வது இடத்தை பெற்றுள்ளது.

**பெண்களுக்கான சர்வதேச உச்சிமாநாடு**

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள பயோ தொழில்நுட்பதுறை பெண்கள் குறித்த சர்வதேச உச்சி மாநாடு STEM-Visualizing the Future: New Skylines' டெல்லியில் நடைபெற்றது. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் குறித்த துறைகளில் பெண்கள் அதிகம் பங்கேற்க வேண்டும் என்பது இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம் ஆகும். (STEM) Science Technologies, Engineering, Maths.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்**

- தொடக்கம் – 1971 மே
- தலைமையிடம் – டெல்லி

**சிறந்த பொலிவுறு நகரங்கள்**

- மத்திய வீட்டு மற்றும் நகரப்புற விவகார அமைச்சகம் நாட்டின் 100 சிறந்த பொலிவுறு நகரங்கள் பட்டியலை தயாரித்து உள்ளது. இதன் மூலம் மோசமான நகரங்களை பிரித்து உள்ளது. சிறப்பு மற்றும் மோசமான 20 நகரங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இதன் மூலம் சிறந்த முதல் நகரங்கள் மோசமாக உள்ள நகரங்களுக்கு சிறப்பாக செயல்பட உதவ உள்ளது.

**உள் தரநிலைகளின் படி முதல் இடத்தில் உள்ள நகரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| நாக்பூர் | திருப்பூர் | ராஞ்சி | போபால் |
| சூரத் | கான்பூர் | இந்தூர் | பூனே |
| விசாகப் பட்டினம் | வேலூர் | வதோரா | நாசிக் |
| ஆக்ரா | வாரணாசி | தகோமா | உதய்பூர் |

# 7 சர்வதேச நிகழ்வு



**இந்திய-நார்வே நாடுகளுக்கு இடையேயான முதல் உரையாடல்**

- இந்தியா-நார்வே நாடுகளுக்கு இடையேயான முதல் உரையாடல் டெல்லியில் நடைபெற்றது. இதில் இரு நாடுகளுக்கு இடையேயான வணிகம் தொடர்பான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டன.

**உலக எதிர்கால ஆற்றல் மாநாடு 2020**

- உலக எதிர்கால ஆற்றல் மாநாடு 2020ன் 10வது பதிப்பு ஐக்கிய அரபு எமீரெட்டில் உள்ள அபுதாபியில் நடைபெற்றது. இதன் மையக்கருத்து 2020 'Rethinking Global Consumption, production and Investment என்பதாகும். மேலும் இதே மாநாட்டில் காலநிலை கண்டுபிடிப்பு பரிமாற்றத்தின் எதிர்கால நிலைத்தன்மை பதிப்பும் (Climate Innovations Exchange and Future Sustainability Summit) நடைபெற்றது.
- இந்த நிகழ்ச்சி ஆற்றல், உணவு, விவசாயம் மற்றும் விண்வெளி நிலைத்தன்மை தொடர்பான புதுமையான கண்டுபிடிப்பு பற்றி விவாதிக்கப்பட்டன

**ஐக்கிய அரபு எமீரெட்ஸ் : பரஸ்பர பரிமாற்ற நாடாக அறிவிப்பு**

- சிவில் நடைமுறை விதிகள் 1908இன் பிரிவு 44A இன் கீழ் ஐக்கிய அரபு எமீரெட்ஸை "பரஸ்பர பரிமாற்ற பிரதேசமாக" (Reciprocating Territory) மத்திய அரசு அறிவித்து உள்ளது. இந்த உத்தரவை சட்டம் மற்றும் நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இதர "பாஸ்பர பிரதேசங்கள்" – சிங்கப்பூர், வங்காளம், மலேசியா, இங்கிலாந்து, ஹாங்காங், பப்புவா நியூகினியா, பிஜி போன்ற நாடுகள் ஏற்கெனவே மத்திய சட்ட அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**உலகத் திருக்குறள் மாநாடு**

- கம்போடியா நாட்டில் வரும் ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் 6ஆம் தேதி வரை 60வது உலகத் திருக்குறள் மாநாடு நடைபெறவுள்ளது.
- இதில் உலகெங்கிலும் இருந்து திருக்குறள் ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேராசியர்கள், தமிழகத்திலிருந்து அரசுத்துறை அலுவலர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

**மகாத்மா காந்தி மாநாடு மையம் தொடக்கம்**

- இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியம் ஜெய்ஷங்கர் மற்றும் நைஜீரியா நாட்டின் குடியரசுத் தலைவர் மகாமது இஸ்ஃபா (Mahamadou Issoufau) முதல் மகாத்மா காந்தி மாநாடு மையத்தை (Mahatma Gandhi Convention Centre) தொடங்கி வைத்தனர். மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு தொடங்கி வைக்கப்பட்டது. மானிய உதவியின் கீழ் இந்தியா ஆப்பிரிக்காவில் நிறுவப்பட்ட முதல் மையம் இதுவாகும். இது மேற்கு ஆப்பிரிக்கா பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டது.
- ஆப்பிரிக்கா நாட்டிற்கு பயணம் செய்த முதல் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு எஸ். ஜெய்சங்கர் ஆவார்.

# 8 தமிழ்நாடு



### அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்

- ஊரகப் பகுதிகளில் விளையாட்டுகளை ஊக்குவிக்க தனித்துவமான முறையில் உருவாக்கப்பட்ட “அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தை“ முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தொடக்கி வைத்தார்.

### விளையாடு-வெற்றிபெறு சிகரம் தொடு

- அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்துக்கான தனி இலச்சினையை முதல்வர் பழனிசாமி வெளியிட்டார்.
- இந்த இலச்சினையில் ஐந்து விளையாட்டுகள் பிரதானப்படுத்தப்பட்டுள்ளன. கிரிக்கெட், கபடி, பூப்பந்தாட்டம், உடற்பயிற்சிக் கூடம், கையுந்துப்பந்து ஆகிய விளையாட்டுகளின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், விளையாடு, வெற்றிபெறு, சிரம் தொடு என்ற வாசகமும் இலச்சினையில் உள்ளது.

### சொட்டுநீர் பாசனத்தில் தமிழகம் முதலிடம்

- சொட்டுநீர் பாசனத் திட்டத்தை செயல் படுத்தியதில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. சொட்டுநீர் பாசனத்தால் தரமான விளைபொருள் கிடைப்பதால், விவசாயிகளுக்கு விளைச்சலுடன், வருமானமும் அதிகரித்துள்ளது.
- தமிழகத்தில் காவிரி உள்ளிட்ட ஆறுகள் இருந்தாலும் பெரும்பாலான ஏக்கர் நிலங்கள் திறந்தவெளி கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகள் மூலமாகவே பாசனவசதி பெறுகின்றன. போதிய மழைப்பொழிவு இல்லாதது, அதிகவெயில் உள்ளிட்ட காரணங்களால் நீர் ஆதாரங்களின் அளவு குறைந்து வருகிறது.
- எனவே, சொட்டுநீர் பாசனத்துக்கு மத்திய, மாநில அரசுகள் முக்கியத்துவம் அளித்து வருகின்றன.

### மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக உணர்வுப் பூங்கா

- மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உகந்த “உணர்வுப் பூங்கா” க்களை சென்னை மாநகராட்சி அமைக்க உள்ளது.
- சென்னை மாநகராட்சி சார்பில் சாந்தோம் பகுதியில் மாற்றுத் திறனாளி குழுந்தைகள் விளையாடுவதற்கான சிறப்புப் பூங்கா “ஸ்மார்ட்சிட்டி”திடடத்தின்கீழ் ரூ.1 கோடியே 37 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்காவுக்கு “உணர்வுப் பூங்கா” என பெயரிடப்பட்டுள்ளது.

### ரூ.5000 கோடியில் தகவல் தொழில்நுட்ப பூங்கா

- தமிழக அரசின் டிட்கோ, டிஎல்எஃப் நிறுவனங்கள் இணைந்து ரூ.5000 கோடியில் தகவல் தொழில்நுட்ப பூங்கா சென்னை தரமணியில் அமைக்க உள்ளது. இத்திட்டத்துக்கு முதல்வர் பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.
- பாதுகாப்பு மற்றும் வானூர்தி தொழிற்பூங்கா, மின்சார வாகனப் பூங்கா ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளன. இதன்மூலம் இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் முதல் மாநிலமாக தமிழகம் உயரும்.

### நெல்லையப்பர் கோயிலுக்கு மத்திய அரசின் தரச்சான்று

- சுவாமிக்கு படைக்கப்படும் பிரசாதம் சுகாதாரமாக தயாரிக்கப்படுவதால், தமிழகத்தில் முதல்முறையாக திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதியம்மன் கோயிலுக்கு டெல்லியிலுள்ள மத்திய அரசின் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் நிர்ணய ஆணையத்தின் (FSSAI) தரச்சான்று (BHOG) வழங்கப்பட்டுள்ளது.
- நாட்டிலுள்ள சிறிய மற்றும் பெரிய உணவு உற்பத்தி நிறுவனங்களில் ஆய்வு செய்து, அவை தயாரிக்கும் உணவு பொருட்களுக்கு எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. அமைப்பானது சான்று வழங்கி வருகிறது.

### வேளாண் பல்கலையுடன் இணைவு பெற்ற கல்லூரிகளின் கட்டண நிர்ணயத்துக்கு குழு

- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற தனியார் கல்லூரிகள் கட்டணத்தை நிர்ணயிக்க ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் குழு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி அண்மையில் பிறப்பித்தார்.
- சிறுபான்மையினர் அல்லது சிறுபான்மையினர் அல்லாத அரசு உதவி பெறாத தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கான கட்டணத்தை நிர்ணயிக்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த நிலையில் வேளாண்மைக் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கான தனி விதிமுறைகளை 2007-ஆம் ஆண்டில் வகுத்து அது மாநில அரசிதழிலும் வெளியிடப் பட்டுள்ளது.
- இதன் அடிப்படையில், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் குழு அமைக்கப்படுகிறது.

### சூழல் சுற்றுலா

- கேரளாவின் தென்மலா சூழல் சுற்றுலா போன்று, தமிழகத்தில் கொடைக்கானல், கல்லார், குற்றாலம், கருமந்துறை, தேவாலா ஆகிய 5 இடங்களில் சூழல் சுற்றுலா (Eco Tourism) அமைக்கப்படுகிறது.
- சூழல் சுற்றுலாவைக் கண்டுகளிக்க வரும் மக்கள் தோட்டக்கலைப் பண்ணையில் நடைபெறும் விதை உற்பத்தி, செடிகளுக்கு ஒட்டுக் கட்டுவது, பதியம் போடுதல், ஆண்டு முழுவதும் காய்கறிகள், பழங்கள், மலர் உற்பத்திக்காக அமைக்கப் பட்டுள்ள பசுமைக் குடில்கள், நிழல்வலைக் கூடங்கள் ஆகியவற்றைக் காணலாம்.

### எந்த ரேஷன் கடையிலும் பொருட்கள் பெறும் திட்டம் ஆய்வு

- குடும்ப அட்டைதாரர்கள் எந்த ரேஷன் கடையிலும் பொருட்கள் பெறும் "ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு" திட்டத்தை, சோதனை அடிப்படையில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் தமிழக அரசு அமல்படுத்தி உள்ளது.
- "ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு" திட்டத்தை மத்திய அரசு வரும் ஜுன் மாதம் முதல் நாடு முழுவதும் அமல்படுத்த உள்ளது.
- இதன் முதல்கட்டமாக தமிழகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதாக இதற்கான அரசாணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.